Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 5—No. 10.

No. ______
7 OCT 1932

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ரு | ஆங்கீரச ஆண்டு ஐப்பசித் திங்கள்<br>1932 ஹு அக்டோபர்மீ | இதழ் ௧௦ |
|---|---|---|

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| அறிவியல், அழகியல், அன்பியல் ... ... | உ௪௧ |
| திரோதாயி ... ... ... | உ௪அ |
| சிவஞானபோத விளக்கம் ... ... | உ௪௯ |
| சைவமும் உயர்குலமும் ... ... | உ௫௫ |
| உமாபதிசிவனார் திரட்டியருளிய அருள்முறைத்திரட்டு உரை ... ... ... | உ௫௭ |
| திருவாசகம் உரையுடன் ... ... | ௧௭-௧௩௨ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1932 வெளி நாட்டுக்கு ரூ. 2-8-0.
தனிப் பிரதி அணா 4.

உ
சிவமயம்

# உயர்திரு - ஞானியார் சுவாமிகள் உடல் நிலை

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் குடியாத்தத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் சில வாரங்கட்கு முன் இரவில் ஒரு வீட்டின் உயர்ந்த குறட்டிலிருந்து இறங்கும்போது தவறி விழ்ந்ததினால் வலது கணுக்காலுக்குச் சில அங்குலங்கள் மேலே எலும்பு முறிவு ஏற்பட்டது. குடியாத்தத்தில் ஒரு மாதத்துக்கு மேல் சிகிச்சை செய்தும் எலும்பு கூடினதாகத் தெரியவில்லை. வேலூரில் செப்டம்பர் மாதக் கடைசியில் எக்ஸ்ரே (X-ray) மூலம் பார்த்ததிலும் குணம் தோன்றவில்லை. 2-10-32-ல் சமாஜத் தலைவர் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்களும் நானும் சுவாமிகளைப் பார்த்தோம். நாட்டு வைத்தியத்தின் மூலம் ஏதாவது சிகிச்சை செய்து கொள்ளலாம் என்று சுவாமிகள் தெரிவித்தார்கள். என்பு கூடப்பெற்று முழுமையும் சௌக்கியமடைந்து மீண்டும் சைவ நன்மக்களுக்கு அறிவுச் சுடர் கொளுத்துவதற்குரிய உடல் நலனை அவர்கள் பெறுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருளை நாமெல்லோரும் வழுத்துவோமாக.

இங்ஙனம் :

ம. பாலசுப்பிரமணியன், காரியதரிசி.

---

## மெய்கண்டார் திருநாள்

இத்திருநாள் நிகழும் ஆங்கிரச ஆண்டு ஐப்பசித் திங்கள் கரு-ம்நாள் சனிக்கிழமை (29-10-1932) வருகிறது. அன்று மெய்கண்டதேவ நாயனார் "சிவஞான போதம்" என்ற மெய்ஞ்ஞான நூலை அருளிச்செய்த சிறந்த தலமாகிய திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்டார் சந்நிதியில் ஒரு பெருங்கூட்டம் சமாஜத்தின் சார்பில்கூடும். திருவாளர்கள் கா. சுப்பிரமணிய பிள்ளை, கி. குப்புச்சாமி முதலியார் முதலிய பேரறிஞர்கள் சிவஞானபோதத்தையும், மெய்கண்டார் சரிதையையும் விளக்குவார்கள். "மெய்கண்டாரும் சிவஞானபோதமும்" என்ற நூல் சைவசித்தாந்த மகாசமாஜம், மணிவாசகமன்றம் ஆகிய இருகழகங்களின் கூட்டு வெளியீடாகச் சமர்ப்பிக்கப்படும். திருநாளுக்குவருவோர் முன்னதாகவே திரு. எம். சின்னசாமி ரெட்டியார் அவர்கள், திருவெண்ணெய் நல்லூர், தென்னார்க்காடு என்ற விலாசத்துக்கு எழுதவும்.

---

## ஆதிதிராவிடரும் கோயில் நுழைவும்

இதைப்பற்றி நமது சமாஜம் என்ன செய்யப் போகிறதென்று திரு. மறை திருநாவுக்கரசனார் "லோகோபகாரி" பத்திரிகையிலும், திரு. ந. சிவகுருநாதன் பிள்ளையவர்கள் கடிதமூலமாயும் வேறு பலர் நேரிலும் வினவுகின்றனர். திருப்பாதிரிப்புலியூரிற் கூடிய சைவர் மகாநாட்டுத் தீர்மானங்கள் 4, 5, 15 (சித்தாந்தம் மலர் உ பக்கம் கசுக—கஅ௲ பார்க்கவும்) இதற்கு அநுகூலமானவை. ஆனால் அத்தீர்மானங்களை உடனே செயல் முறையிற் கொணர்வதற்காக உழைப்பதற்குரிய பொருள் வலிவு, ஆள்வலிவு முதலியன சமாஜத்துக்கில்லை. பொருள் வலிவையும் ஆட்களையும் எவரேனும்உதவினால் சமாஜம் முழுமனதோடு இத்துறையிலிறங்கிச் சாத்துவிக முறையில் வேலைசெய்வதற்கு முனைந்துவரும் என்று அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம் :

சைவ சித்தாந்த மகா சமாஜம்.
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை. 10—10—1932

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி

No.
27 OCT 1932

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

“ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு”

| | | |
|---|---|---|
| மலர் ௫ | ஆங்கீரச ஆண்டு ஐப்பசித் திங்கள்<br>1932 ௵ அக்டோபர்மீ | இதழ் ௧௦ |

## அறிவியல், அழகியல், அன்பியல்

### (Science, Art and Religion)

[பத்திராசிரியர்]

*[இது யாம் பலவான்குடி ஸ்ரீ மணிவாசக சங்கத்தின் இருபத்திரண்டாம் ஆண்டு நிறைவிழாவில் 11-9-32-ல் நிகழ்த்திய தலைமையுரையின் சுருக்கம்; பி. எச். ஸ்ட்ரீடர் எழுதிய “பொருள்” (**B. H. Streeter's “Reality”**) என்ற நூலின் முதலிரண்டு அதிகாரங்களைத் தழுவியுள்ளது.]*

**எனது அருமைச் சகோதரி சகோதரர்களே!**

என்னையுமோர் பொருட்படுத்தி ஈண்டுத் தலைமை வகிக்குமாறு பணித்த நுங்கள் பெருந்தகைமைக்கு வந்தனம். ஆறறிவு படைத்த மக்களெல்லாரும் சமய வுணர்ச்சியுடையவர்களாக இருத்தல் இயல்பென்று பல்லாயிர ஆண்டுகளாகக் கருதப்பட்டது. கடவுளில்லை யென்ற உலகாயதக் கொள்கை மிகப் பண்டையதெனினும், கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் அது நார்பயில் தேசந்தன்னில் நான் மறைபயிலா நாட்டிலுங் கூட உயிர் பெற்று விளங்கவில்லை. ஆனால் கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நிகழ்ந்த அறிவியற் புதுமை வெளியீட்டின் பெருக்கத்தால் உலகாயதம் மீண்டும் தலை காட்டிற்று. ஆனால் இப்போது அறிவியற்றுறையில் பேரறிஞர்களாகக் கருதப்படுவோரெல்லாரும் உலகாயதத்தை வெறுத்து ஆஸ்திகக் கொள்கையையே மேற் கொண்டுள்ளார்கள். இடைக்காலத்தே தோன்றி நின்றழிந்த மலைவு நமது நாட்டில் சில பகுதிகளில் “சுயமரியாதை”யாகச் சிலரைப் பீடிக்கின்றது. எனவே, இம்மலைவின் வரலாற்றை மிகச் சுருக்கமாகவே மேல் நாட்டு நூல்களின் துணை கொண்டே ஆராய்

வோம். உலகாயதக் கொள்கையும் அதின் மறுப்பும் சிவஞான சித்தியார் பரபக்ஷத்துள் விரிவாகக் கூறப்பட்டுள்ளனவெனினும், மேற் கூறிய மலைவு மேல் நாட்டு அறிவியலின் போலித் துணைகொண்டு உலவுவதால் அவ்வறிவியலின் மெய்த்துணை கொண்டே அம்மலைவைத் தீர்ப்பதுதான் அறிவுடைமையாகும்.

ஐரோப்பாவில் கிரீஸ் தேசத்தில் டெமாக்ரிடஸ், எபிக்யூரஸ் என்பவர்களால் உலகாயதம் இற்றைக்கு இரண்டாயிரத்து மூந்நூறு ஆண்டுகட்கு முன்னரே ஓதப்பட்டது. என்றாலும், நியூடன் என்ற கணித சாஸ்திரியார் கண்டுபிடித்த மூன்று இயக்கச் சட்டங்கட்கு (Newton's Three Laws of Motion) முன்னர் உலகாயதத்துக்கு ஐரோப்பாவில் எவ்வித வலிமையும் ஏற்படவில்லை. மேற் கூறிய நியூடன் சட்டங்கட்கு முன்னர் வானத்தை நோக்குவோர் கடவுளின் கை வேலையையும் பெருமையையுமே ஞாயிறு, திங்கள், விண் மீன்கள் முதலியவற்றில் கண்டார்கள். நியூடன் முதன் முதலாக அவைகளின் இயக்கமெல்லாம் மூன்று சட்டங்களின்படியே நடக்கின்றனவென்று கண்டு பிடித்தார். உடனே சில அறிஞர்கள் இருப்புயந்திரங்களைப் போல் சில சட்டங்களுக்குட்பட்டு நடக்கும் உலகத்துக்கு ஒரு தனிமுதல்வன் எற்றுக்கு என்று ஏசத் தொடங்கினர். லாப்லேஸ் என்ற வானசாஸ்திரி எழுதிய வான நூலில் கடவுளைப்பற்றிய பிரஸ்தாபமே யில்லையே என்று நண்பர் ஒருவர் வினவ, "ஐய, அந்த மேற்கோளின் அவசியம் எனக்கு வேண்டியதில்லை" ((Sir, I have no need of that hypothesis) என்று அவர் கூறினர்.

டார்வின் என்ற அறிஞர் கூர்தல் முறையை (Evolution) விளக்கிய பின்னர் அறிவியற்றுறையில் உழைக்கும் அறிஞர் பலர் கடவுளில்லை யென்று பேரிரைச்சல் செய்யத் தொடங்கினர். "எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்களும் கடவுள் படைப்பல்ல ; ஒன்றிலிருந்து ஒன்றாக இயற்கையிலேயே தோன்றின" வென்றார்கள். "பறவைகளின் இறக்கைகளும் மக்கள் கண்களும் அதிசயிக்கக் கூடிய கடவுளின் விசித்திர வேலைகளல்ல; இயற்கையில் தோன்றியவைகளே" யென்றார்கள். உணர்ச்சி என்பது வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு எனும் மூன்றின் சேர்க்கையால் தோன்றும் சிவப்பைப்போன்றதென்றார்கள். (Consciousness is only an epi - phenomenon) ஓர் அடுக்குக் காகிதத்தை ஒரு புறத்தில் வைத்துவிட்டால் ஓர் அச்சு இயந்திரம் எவ்வாறு அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து அச்சடித்து, வெட்டி, மடித்து நியூஸ் பேபர் என்ற வர்த்தமானப் பத்திரிகைகளாக மற்றொரு புறத்தில் தானே அடுக்கி விடுகிறதோ, அவ்வாறே இயற்கை யென்ற பெரியதொரு இயந்திரமும் உலக காரியங்களைப் பல சட்டதிட்டங்களோடு தானாக நடத்திவருகிறதென்று அவ்வறிஞர்கள் கூறுகின்றார்கள். சுருங்கக் கூறின் அறிவு, இச்சை, செயல், உணர்ச்சி முதலியவைகளையுடைய (எனவே இம்மட்டிலாவது மக்களைப்போன்ற) ஒரு கடவுள் உலககாரியத்துக்குக் காரணரல்லர். ஆனால் இவைகளில்லாத வெறும் இருப்பு இயந்திரம்போன்ற "இயற்கை" யென்பதே உலக காரியத்தை நடத்துகிறது யென்பதே இவர்கள் கூற்று.

18168



இக் கொள்கையை ஒரு சிறிது நுணுகி ஆராய்ந்தால் இதிலுள்ள அறிவீனம் வெட்டவெளிச்ச மாய்விடும். அறிவு இச்சை செயல்களை யுடைய கடவுளைக் காரணனாகக் கொள்வது மக்கள் சாயலில் கடவுளை நமது மனம் படைக்கின்றதே தவிர வேறொன்றுமில்லை யென்பது உலகாயதர் கூற்று. இதை ஆங்கிலத்தில் " Anthropomorphism " என்பார்கள். இக்குற்றம் இக்கொள்கையில் இருப்பதால் இதை ஒப்புக்கொள்ள முடியாதென்று உலகாயதர் கூறுகின்றனர். ஆனால் அவர்களது இயந்திர இயற்கை (Mechanomorphism) என்ற கொள்கையில் இதைவிடப் பெரியதொரு குற்றமிருப்பதை உலகாயதர் உணர்வதில்லை. மக்களது அறிவு, இச்சை, செயல்களைக் கொண்டே இயந்திரங்கள் ஆக்கப்பட்டுள்ளன; பல்சக்கரங்கள், சுற்றுகின்ற பல விசைகள் முதலியவற்றைக் காகிதத்தில் அச்சிட்டு, அதை வெட்டி, மடித்து, அடுக்குவதற்காகவே மனிதன் தனது அறிவு, இச்சை, செயல்களைக்கொண்டு அச்சு இயந்திரமாகத் திட்டம் செய்துள்ளான். அந்த முறையில் அந்த இயந்திரம் இல்லாவிட்டால் மேற்கூறிய வேலைகளை அது செய்யாது. மேலும் மேற்கூறிய இயந்திரமானது புத்தகமாகத் தைத்து, பைண்டு செய்வதற்கு உதவாது; வட்டமாகவோ, சித்திரங்களாகவோ காகிதத்தை வெட்டுவதற்கு உதவாது; காகிதப்பைகள் செய்ய உதவாது; வேறு எதற்கும் உதவாது. எனவே, ஒரு இயந்திரத்தைக் குறித்த ஒருதொழில்செய்வதற்காகப் படைப்பது மனிதனுடைய அறிவிச்சை செயல்களே. எனவே, (Mechanomorphism) என்ற இயந்திர இயற்கைக் கொள்கையில் மக்கட்சாயல் என்ற கொள்கை (Secondhand anthropo-morphism) ஒரு கை மாறியிருக்கிறது. ஆகவே ஒருகை மாறிய இரண்டாந்தர மக்கட்சாயற் கொள்கையை விட முதல் தரமான மக்கட் சாயற் கொள்கையே மேல் என்று கூறுவதில் எவ்வித தவறுமில்லை. இதைத்தான் பழைய காலத்தில் சைவ ஆன்றோர்கள் கடவுள் நிமித்தக்காரணரென்றும் சித்துப் பொருள் இயக்கினாலன்றிச் சடப்பொருள் இயங்காதென்றும் சுருங்கக் கூறினார்கள். ஒரு காரியத்துக்கு ஒரு காரணம் உண்டென்ற கொள்கையிலேயே மக்கட் சாயல் (Anthropomorphism) பொதிந்து கிடக்கின்றது. நெருப்பு காகிதத்தைச் சுடுகின்றதை நாம் கண்ணால் பார்க்கின்றோம். சுடுகின்ற செயலே நாம் காண்பது. அச்செயலுக்கு நெருப்பு காரணம் என்பதை நமது அறிவு ஊகிக்கிறது. ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டென்பதே மக்கட்சாயற் கொள்கையாக முடிகின்றது. கான்ட் (Kant) என்ற தத்துவசாஸ்திரி இது மனத்தின் இயல்பு என்று கூறினர். (The human mind is so constituted that it cannot help making this kind of inference - cause and effect.)

நினைத்தல், பேசுதல், செய்தல் என்ற மனம் வாக்கு காயங்களின் தொழில்கள் மூன்றும் மக்கட்சாயலாக இருத்தலேயன்றி வேறு சாயலாக இருக்க முடியாது. நாற்காலி என்ற இடத்து, நான்கு கால்களையுடைய இருக்

கை யென்றே நாம் கூறவேண்டியிருக்கிறது. நான்கு கால்கள் என்று கூற வேண்டியது மட்டும் அவசியமே யொழிய கால்கள் என்றவுடனே எலும்பு, தசை, மயிர், நகம் முதலியவைகள் நாற்காலியின் கால்களுக்கும் உண்டு என்று கொள்ள வேண்டிய அவசியமில்லை. அஃதேபோல், மலையின் சிகரம், ஊசியின் காது, ஏரியின்வாய், குடத்தின் கழுத்து என்று கூறவேண்டியிருப்பினும் சிகரத்தில்குடுமி, காதினுள்மென்தோல், வாயினுள் நாக்கு, கழுத்தில் நெஞ்சுக்குழி முதலியன இருப்பதாகக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இவைகளை இன்னும் விரிப்பில் மிகப்பெருகும். சுருங்கக்கூறின், மனிதன் உலகத்தைத் தனது அறிவு கொண்டு அளப்பவனும் ஆகிறான்; அளவு கோலாகவும் இருக்கிறான். (Man is both the measurer and measure of the Universe). எனவே, மக்களது மனம் மக்கட் சாயலாகவே சிந்திப்பதில் இழுக்கொன்றுமில்லை. அது மக்களறிவுக்கு இன்றியமையாத இயற்கையேயாம். (Anthropomcrphism is inevitable in human thought). இவ்வாறு சிந்திப்பதில் நேரே மக்கட் சாயலாகக் கொள்ளாது மக்களாலாக்கப்பட்ட இயந்திரச் சாயலாகக் கடவுளைக் கொள்வதுதான் அறிவின்மை யென்பது இதுகாறுங் கூறிய வாற்றால் விளங்குமென்று எண்ணுகிறேன்.

இனி ஆங்கிலத்தில் Reality என்று கூறப்படும் பொருள் என்பதை மூன்று கூறாக விவரிப்பது ஒருவகை மரபு. நமது நாட்டிலும் இப்பாகுபாடு உண்டென்பதைப்பின்னர் தெரிவிப்பேன். உண்மை (அல்லது அறிவு), அழகு, நன்மை (அல்லது அன்பு), என்ற மூன்றின் சேர்க்கையே பொருள் என்பது. (Truth, Beauty and Goodness are the component parts of Reality) இவற்றின் தன்மைகளை விவரிக்கும் இயல்களுக்கு முறையே அறிவியல், அழகியல், அன்பியல் என்று பெயர். (Science, Art and Religion) இவற்றுள் ஒரு இயலில் கூறப்பட்ட விஷயங்கள் மற்றொன்றில் கூறப்படமாட்டா. ஒரு இயலில் கூறப்படாத விஷயங்கள் உலகத்திலேயே இல்லையென்று கொள்வது பேதைமையே யாகும். அறிவியல் ஒன்றினால் மட்டும் அறியக் கூடாத கடவுளை இல்லையென்று கூறுவது, மேலே கண்டவாறு பெரும் பேதைமையே.

இவற்றுள் (Science) என்ற அறிவியலின் தொழில் பொருளை அளவிட்டுக் கூறுவது. (The realm of Science is quantity). அறிவியல் நுட்ப ஆராய்ச்சிச் சாலைகளில் எங்கு பார்த்தாலும் அளவைக் கருவிகளே நிறைந்து கிடக்கும் (A scientific research laboratory is full of measuring apparatus). அழகியல் (என்ற Art) பொருளின் தன்மை, குணம்அழகு முதலியவற்றை அளவிட்டுக்கூறாது, சிற்பம், ஓவியம், பாட்டு, ஆட்டம்முதலியவற்றின்மூலம் நமக்கு உணர்த்துவது. அன்பியல் (என்ற Religion) நன்மை தீமைகளையும் மக்கள் நடவடிக்கை நுட்பங்களையும் மக்களுக்கும் பொருளுக்கும் உள்ள பலவகைத் தொடர்புகளையும் பல வாழ்க்கை உதாரணங்களின் மூலம் நமக்கு உணர்த்தும் தொழிலுடைத்து.

இவை மூன்றற்குமுள்ள வித்தியாசத்தை ஒருசிறு உதாரணங்கொண்டு விளக்குவாம். ஆதிமூர்த்தி பிள்ளை யென்பவரை நாம் அறியோம் என்று



வைத்துக் கொள்வோம். அறிவியலானது அவரது உயரம், பருமன், கழுத்தளவு, மூக்களவு, கையளவு, காலளவு, எடை, நிறம், பல், உதடுமுதலியவைகளைப்பற்றிய விவரங்கள், உடம்பிலுள்ள பல அடையாளங்கள் முதலியவற்றை வரையறுத்து அளவிட்டு போலீஸ் அறிக்கைகளில் விவரிப்பது போல் கூறும். அழகியலோவெனில், ஒரு புகைப்படம், சிற்பம், அல்லது எழுத்தோவியமாகச்செய்து அவரது தன்மை, குணம், நிலை முதலியவற்றைக் குறிப்பால் உணர்த்தும். அவர் சிவபக்தரா யிருந்தால் படத்தில் விபூதி, உருத்திராக்க மணிந்து, தொழுதகை தலைமேலேறத் துளும்புகண் ணீருள் மூழ்கி, கருணைமிகுந்த பார்வையோடு விளங்குவர். அவர் கள்வர்தலைவரா யிருந்தால் கன்னக்கோலும் கறுப்புமேனியும் முறுக்கு மீசையும் முண்டாசும் திருட்டுப் பார்வையும் நெரித்த பற்களும் இழுத்துக்கட்டிய அரைக்கச்சையும் கொண்டு படத்தில் அச்சுறுத்துவர். அன்பியலோவெனில் புறத்தோற்றம், அகநெகிழ்ச்சி, தன்மை, குணம், செயல் முதலியவற்றில் கூடியவரையில் அவரைப்போன்ற மற்றொருவரைக் காட்டி நமக்கு அறிவுறுத்தும். தொல்காப்பியம் ஒரு சிறந்த அறிவியல் நூல்; மணிமேகலை ஒரு சிறந்த அழகியல் நூல்; பெரியபுராணம் ஒரு சிறந்த அன்பியல் நூல். உலகத்திலுள்ள எல்லாவற்றையும் அளவுஎன்ற ஒன்றின் மூலமே அறியமுடியாது. மூன்றடி நீளமும் இரண்டடி அகலமுமுள்ள இரண்டு சரஸ்வதி படங்களுள்ளன. ஒன்றின் விலை ஒரு ரூபாய். மற்றொன்றின் விலை ஐந்து ரூபாய். இதிலிருந்து பின்னையது முன்னையதைவிட ஐந்து மடங்கு அதிகம் அழகுள்ளது என்று கூறமுடியுமா? ஒரு குற்றத்துக்கு மூன்று மாதம் தண்டனையும் மற்றொன்றுக்கு ஆறு மாதமும் விதிக்கப்பட்டால் பின்னைய குற்றம் இரண்டு பங்கு கொடியது எனலாகுமா? ஓர் உபாத்தியாயருக்கு முப்பது ரூபாய் மற்றொருவருக்கு அறுபது ரூபாய் சம்பளமென்றால் முற்கூறியவர் படிப்பு அரைப் படிப்பு; பிற்கூறியவர் படிப்பு முழுப்படிப்பு என்பாருண்டா? விரிக்கிற் பெருகும். Reality என்ற பொருளானது அளக்கக்கூடிய பகுதிகளையும் அளப்பரிய பகுதிகளையும் உடைத்து என்பதே அறிவுடைமையாம். எட்டிங்டன் என்ற பிரபல வானசாஸ்திரி பின்வருமாறு கூறுகின்றார் "தூல உலகம் சூக்கும உலகம் என்றபாகுபாடு மேற்போக்கானது; அதைவிட ஆழ்ந்தது அளப்புறும், அளப்பரிய பகுதிகளென உலகத்தைக் கூறிடுவதே" (I venture to say that the division of the external world into a material world and a spiritual world is superficial, and that the deep line of cleavage is between the metrical and the non-metrical aspects of the world —Prof. A S. Eddington in "Science, Religion and Reality" edited by Needham-Sheldon Press-1925 at page 200., இவ்வாசிரியரே மற்றோரிடத்தில் விரிந்த அறிவியலின் குறுகிய திட்டமுடைய தொழிலை மிக அழகாகக் கூறுவதை மட்டும் திரட்டித் தந்து இப்பகுதியை முடிக்கிறேன். "Leaving out all aesthetic, ethical or spiritual aspects of our environment, we are faced with qualities such as massiveness, substantiality, extension, dura-

tion, which are supposed to belong to the domain of physics. In a sense they do belong; but physics is not in a position to handle them directly. The essence of their nature is inscrutable; we may use mental pictures to aid calculations, but no image in the mind can be a replica of that which is not in the mind. And so in its actual procedure, physics studies not these inscrutable qualities but pointer readings which we can observe. The readings, it is true, reflect the fluctuations of the world qualities; but our exact knowledge is of the readings, not of the qualities. The former havc as much resemblance to the latter as a telephone - number has to a subscriber" (Eddington in the same book at p. 199.) சுருங்கக் கூறின் அறிவியல் மூலம் அளவைக் கருவிகளிற் காட்டப்படும் குறிப்புக்களை யறிகிறோமேயன்றிப் பொருளின் உண்மையான தன்மைகளை அறியமுடியாது. டெலிபோன் நெம்பருக்கும் அந்த நெம்பரையுடைய முதலாளிக்கும் எவ்வளவு ஒற்றுமையுண்டோ, அவ்வளவுதான் கருவிக் குறிப்புகட்கும் பொருளின் தன்மைகட்கும் உள்ளது என்பது மேலே கூறப்பட்டது.

இம்மட்டில் மேனாட்டவர் ஆராய்ச்சியை நிறுத்தி நமது தேசத்தில் இப்பாகுபாடு எவ்வாறுளதென்பதை ஒரு சிறிது ஆராய்வாம். பொதுவாக ஹிந்து சமயத்தில் அறிவு, அழகு, அன்பு (Truth, Beauty & Goodness) என்பன முறையே, பிரமன், விஷ்ணு, சிவன் என்ற திரிமூர்த்திகளாக உருவகம் செய்யப்பட்டன. பால் போன்ற இக்கொள்கையைக் கடைந்து சத்து சித்து ஆநந்த மென்ற முறையில் சுவையுறு நெய்யாகச் சைவ சித்தாந்தம் நமக்குத் தருகிறது. அறிவை நான்கு திசைகளினின்றும் வரும் செய்திகளைக் கொண்டு பெருக்கவேண்டும். அறிவின் உருவகமாகிய பிரமன் நான்கு முகங்களையுடைய திசைமுகனாயினான். வேதம் அறிவுக் களஞ்சியம் எனப்படும். பிரமன் வேதம்போம் வாயானென்றும் வேதவித்தென்றும் கூறப்படுகிறான். அறிவே புதிய கருத்துக்களையும் தோற்றங்களையும் செயல்களையும் உண்டாக்கும் ஆற்றலுடையது. எனவே, பிரமன் படைப்புத் தொழிலுடையான். அறிவின் சிறந்த சக்தி நாவன்மை. எனவே பிரமனும் தனது சத்தியை நாவில் வைத்துள்ளான். பிரமனது சத்தியாகிய சரஸ்வதியும் நாமகள், கலைமகள் எனப் பெயர் பெற்றாள். இன்னும் விரிப்பில் மிகப் பெருகும். இவ்வாறே அழகின் உருவகமாகிய விஷ்ணு பட்டுப்பீதாம்பரங்களோடும் கௌஸ்துப மணி முதலிய அணிகலன்களோடும் நீலமேக நிறத்தோடும் அழகுற விளங்குகிறார். அவரது சக்தியும் அழகுக்கு இலக்கான இலக்குமியே. பொருளின்றேல் அழகில்லை (உலக வழக்கில்). எனவே, அழகின் சக்தி பொருட் சத்தியாகவும் உள்ளாள். பொருளுக்கும் அழகுக்கும் நிலைக்களனாகிய விஷ்ணு காத்தல் தொழிலைச் செய்தலுமியல்பே. பொருளின்றிக் காத்தல் கைகூடாது. காத்தற் கடவுளுக்கே துஷ்டரைத் தொலைக்க அவதாரம் செய்யும் பொறுப்பும் ஏற்பட்டது மியல்பே. காத்தலுக்குத்



தோள் வலியும் அகன்ற மார்பும் தேவை. பலசாலிக்குப் பெரிய வலியுற்ற நுரையீரல்கள் (Lungs) இருத்தல் வேண்டும். அவைகளையுடையவன் அகன்ற மார்புடையவனாதல் வேண்டும். அவனது சக்தியும் மார்பிலே யுள்ளது எனக் கூறலாம். இம்முறையில் நோக்குங்கால் மகாவிஷ்ணுவும் சக்தியை மார்பில் வைத்துள்ளதும் பொருத்தமாகவே யிருக்கிறது. மேற்கொண்டு விரிப்பிற் பெருகும். இவ்வாறே சிவனுருவத்தையும் சிந்திக்கலாம். அன்புருவாகிய சிவன் தன்னுருவில் பாதியைத் தனது சத்திக்குத் தந்த நுட்பத்தை நோக்குக. அழிப்பே இளைப்பாற்றல் என்ற காருண்யச் செயல். அழிவில்லாத உலகத்தில் நிற்பதற்கும் நிழல் கிடைக்காது. நமது முப்பதாவது பாட்டனார் முதல் நமது வரையில் கணக்கெடுத்தால் எத்தனை பேருண்டோ அத்தனை பேரும் உயிரோடிருந்தால் நமது வீட்டிலல்ல நமது ஊரிலேயே இடங் காணுமா ? எத்தனை காணிகளில் விளையும் நெல் ஒருநாள் சாப்பாட்டுக்காகும்? என்றெல்லாம் யோசித்துப்பார்த்தால் அழிப்புத் தொழிலின் கருணையும் அவசியமும் விளங்கும். எவ்வளவோ துன்பம், வறுமை, மனத்தளர்ச்சி, உடல் தளர்ச்சி முதலியன அழிப்பினால் தொலைகின்றன. எனவே, அன்பின் உருவகமாகிய சிவன் அழிப்பதும் அன்பின் செயலே. அவனது சத்தியும் அருட்சத்தியே. சிவனுடைய அணிகலன்களான தலைமாலை, பிறை, நாகம், புலித்தோல் முதலியனவும் பல அன்புச் செயல்களின் அடையாளங்களே. இவற்றின் விரிவை யெல்லாம் சிவ பராக்கிரமம் முதலிய நூல்களிற் காண்க. மேற்கூறியவைகட்கு வேறு பல தத்துவார்த்தங்களும் ரஹஸ்யார்த்தங்களும் உள்ளன. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இது பொதுவான ஹிந்து சமயத்தில் சுருதி, மிருதி, இதிகாசம், புராணம் என்பவற்றால் கூறப்பட்ட விஷயம். "சிவம் சத்தி நாதம் விந்து" .......என்ற சித்தியார் சுபக்கச் செய்யுளிலும் இந்த உண்மை கூறப்பட்டுள்ளது.

இனி, சைவ சமயத்தில் சச்சிதாநந்தப் பொருள் சோமாஸ்கந்த ரூபமாகவும் சிவலிங்க ரூபமாகவும் விளங்குவதை ஈண்டு விரிப்பில் மிகப் பெருகும். சதாசிவ ரூபம், சிவலிங்க மான்மியம் முதலிய நூல்களுள் இதன் விரிவைக் காணலாம்.

இது காறும் கூறியவாற்றால் அறிவியல், அழகியல், அன்பியல் என்ற மூன்றும் சேர்ந்தாலன்றி பொருளின் (Reality) முழுத்தன்மையை அறிய முடியாதென்றும், அறிவியல் ஒன்று கொண்டே கடவுளையாவது உலகத்தையாவது அறிய முயன்று அறியக் கூடாத விடத்துக் கடவுளில்லை யென்பது அறியாமையே யென்றும், அறிவு அழகு அன்பு மயமான கடவுளை (Reality as Truth, Beauty and Goodness) நமது நாட்டினர் திரிமூர்த்திகளாகவும் சச்சிதாநந்தப் பொருளாகவும் ஓதுவது மேல் நாட்டு முறைக்கும் பொருத்தமுள்ளதே யென்றும் என் சிற்றறிவிற்கும் சிறு கால வளவைக்கும் தகுந்தவாறு விளக்கினேன். இத்துணை நேரம் மிகப் பொறுமையுடன் எனது புன்மொழிகட்குச் செவி மடுத்த உங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். சுபம்.

# திரோதாயி

[கி. குப்புச்சாமி முதலியார்.]

திரோதாயி என்பது மறைத்தல் என்னும் பொருள்பட நிற்பது. அதாவது, ஆண்டவனுக்கு உள்ள பஞ்ச சத்திகளுள் ஒன்றாய், ஆன்மாக்கள் மும்மலங்களால் ஆகிய பிறத்தல் இருத்தல்களைச் செய்கின்ற காலத்து, ஆணவமலத் தொழிலால் யான் எனதென்னும் இருவகைப் பற்றுகொண்டு, போகங்களைத் துய்க்கும் காலத்து, நன்மையைத் தீமையென்றும், தீமையை நன்மையென்றும் எண்ணும்படி மறைப்பினைச் செய்து பின்னர் ஆன்மாக்கள் மெய்யுணர்வடைந்த காலத்து ஆன்மாவுக்கு உபகாரமாய்த் தன்னையறிவதற்கும், தன் தலைவனையறிவதற்கும் உபகாரியாக இருந்து, அநுக்கிரகத்துக்குத் துணையாகும் சத்தியாகும். இது ஆணவம் முதலிய மலங்களுக்குத் துணையாய் நின்ற காலத்து, ஆன்மாக்களின் அறிவைக் குறைத்தும், ஆன்மாக்களுக்குத் துணை நின்ற காலத்து ஆண்டவனை யறியச்செய்யும் மெய்யுணர்வாகியும் நிற்கும் சத்தியாம்.

இதனாலன்றோ ஆணவ மலத்தின் குறியாகிய முயலகனை ஊன்றி நிற்கும் திருவடியில் திரோதாயி உள்ளது என்பர். அதாவது, திரோதாயி சத்தியானது ஊன்றிய திருவடியில் நின்று ஆணவமல முதலியவைகளுக்கு முன்னர் உபகரிப்பதென்றும், பின்னர் ஆன்மாக்களுக்கு மெய்யுணர்வு வந்த காலத்து அவன் தூக்கிய திருவடியடைதற்கு நடுவாயுள்ளது என்றும் நூல்கள் கூறுகின்றன.

இதனை, சித்தியாருள் இரண்டாவது சூத்திரம் 87-வது செய்யுளில் "ஏயும்இம் மலங்கள் தத்தம் தொழிலினையியற்ற ஏவும், தூயவன் தனதோர் சத்தி திரோதான கரியது" என்பதனால் அறிதல்கூடும். அன்றியும், "பந்தமும் வீடுமாயினார்க்கு" "பந்தம் வீடு தரும் பரமன்" என்னும் திருவாக்குகளாலும் அறிதல் கூடும்.

இது அவன் திருவடியில் நிற்பது என்பது உண்மை விளக்கம் 37-வது செய்யுள், "தோற்றம் துடியதனில் தோன்றும் திதியமைப்பில், சாற்றியிடும் அங்கியிலே சங்கார—மூற்றமா, யூன்று மலர்ப்பதத்திலுள்ள திரோதம் முத்தி, நான்ற மலர்ப்பதத்தே நாடு" என்பதனால் அறிதல் கூடும்.

## சமாஜ ஆண்டு விழா அறிக்கை

நம் சமாஜத்திய இருபத்தேழாவது ஆண்டு நிறை விழா நடக்கவேண்டிய இடம், தலைவர், இளைஞர் மங்கையர் மகாநாட்டுத்தலைவர்கள், நடைமுறை முதலிய விவரங்களைத் தீர்மானிப்பதற்கு, சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று. சமாஜக் காரியாலயத்தில் 1932௵ அக்டோபர்மீ 23உ ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்குக்கூடும். அன்று போதிய கூட்ட நிறைவெண் (quorum) இல்லாவிடில் அக்கூட்டம் அதேயிடத்தில் அதே மணிக்கு அடுத்த நாள் கூடும். அன்று வந்திருப்பவர்களைக்கொண்டு முடிவு செய்யப்படும்.

காரியதரிசி.

# சிஞானபோத விள்க்கம்

[கி. குப்புச்சாமி முதலியார்]

## பதினோராஞ் சூத்திரம்

மேல் பத்தாஞ் சூத்திரத்துள் 'ஏகனாகி இறைபணி நிற்பார்' என்றமையால், அவ்விதம்ஏகனாகி இறைபணி நிற்பார்க்கு, அறிவு இச்சை, செயல்கள் விடயத்திற்கு ஆவதோர் இயல்பு அங்கு இல்லாமையால், விடயமாவது ஒன்று இல்லைபோலும் என்னும் வாதிகளை நோக்கி, விடயித்தல் இல்லாத வழி புத்தர் கூறும் கூற்றைப்போல் சூனியம் எனக் கூறப்பட்டு, குணமாகிய அறிவு, இச்சை, செயல்கள் சூனியமாதலும், குணியாகிய ஆன்மாவும் சூனியமாய் முடியுமாதலால், அது கூடாமையின், அத்தொடர்புபற்றி விடயிக்கும்விதம் உணர்த்தும் விதத்தால், பாசநீக்கம், சிவப்பேறு என்னும் பயன் இரண்டனுள் மேற் சூத்திரத்துள் பாசநீக்கம் கூறியவர் இப்பதினோராஞ் சூத்திரத்துள் சிவப்பேறு கூடுதலாய நிட்டையினது இயல்பு இது என உணர்த்துவார்,

"காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம் போற்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா வன்பின் அரன்கழல் செலுமே"

என்று கூறினர். (இதன் பொருள்.) காணுங்கண்ணுக்கு - காட்டக்காணுந் தன்மையுடைய கண்ணுக்கு,காட்டும்-உருவத்தைக் காணும்படி அக்கண்ணோடு ஒன்றுசேர்ந்து நின்றுகாட்டி அவ்வுருவத்தைக் காண்கின்ற, உளம்போல் - ஆன்மாவைப்போல, காண - அறிவிக்க அறியும் இயல்பையுடைய ஆன்மா அவ்விடயத்தை யறியும்படி, உள்ளத்தைக் கண்டு காட்டலின் - முதல்வன் அவ்வான்மாவோடு ஒன்றுசேர்ந்து நின்று அறிவித்து அறிந்து வருதலால், அயரா அன்பின் - அவ்வத்துவித நிலையை மறவாது உறுதிகொண்டு செய்யும் அன்பினாலே, அரன்கழல் செலும் - அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்தானுபூதியைத் தலைப்படும் (என்பதாம்.)

இவ்விதங் கூறுவதால், உயிரை இன்றியமையாத கண்ணானது, ஓர் உருவத்தைக் காணுமிடத்து, உயிரினுடைய உணர்வானது, கண்ணொளி எனவுந் தானெனவும், வேற்றுமையில்லாது உடனாய்க் கலந்து நின்று, கண்ணுக்குக் காட்டிய அவ்வுருவத்தைக் கண்கண்டது என்றும், கண்ணைச் சேர்ந்து நின்ற உயிர்கண்டது என்றும் பிரித்தறிய வாராது, இரண்டனது காட்சியும் ஒன்றையொன்றுவிடாது அத்துவிதமாகி ஒருங்கே நிகழ்வதுபோல், முதல்வன் இல்லாது அமையாத உயிர் ஒரு விடயத்தை யறியுமிடத்து, முதல்வனது சிற்சத்தியானது, ஆன்ம சிற்சத்தி என்றும் தானென்றும் வேறு இல்லாது உடனாய், கலந்து நிற்க முதல்வனும் அவ்விதங் கலந்து நின்று ஆன்மாவிற்கு அறிவித்தது ஒன்றனை அவ்வான்மா அறிந்ததென்றும், அதனை அதிட்டித்து நின்ற தான் அறிந்தானென்றும் பிரித்தறியவாராது, இருவித அறிவும் ஒன்றையொன்றுவிடாது, அத்துவிதமாய் ஒருங்கே நிகழும்விதஞ் செய்து

வரும் இவ்விவகாரம் பெத்தநிலையினும், முத்தி நிலையினும் ஒரு தன்மையதாய் உண்டாவது ஒன்றாதலால், மேற்சூத்திரத்துள் கூறியபடி ஏகனாகி இறைபணி நிற்கும் உயிர், முதல்வன் அவ்விதம் அத்துவிதமாய் விவகாரஞ் செய்து நிற்கும் உரிமையை நோக்குமாயின், நோக்குந்தோறும், நோக்குந்தோறும் இறைவனாகிய அப்பொருளின்கண் செல்லும் இச்சையானது அடங்காமல் மேற்கொண்டு நிற்குமாதலால், அவ்வழி அவ்விச்சையே தானாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை யநுபவிக்கப்படுமென்று, அறிவு, இச்சை, செயல்கள் மூன்றும் விடயிக்கும் விதத்தை யுணர்த்தி அதீத நிலையின் இயல்பினைக் கூறியவாறாயிற்று.

இவ்வதீத நிலையின் இயல்பினை இப்பதினோராஞ் சூத்திரத்தின்கண் வைத்தது எற்றுக்கோவெனின், அத்துவிதநிலை இதுவென்று இனிது விளக்குவதற்கே யாகும். ஏனெனின், அத்துவிதம் என்பது, பேதப்பொருள் இரண்டில் தம்முள் பேதமிலாது அபேதமாதற்குரிய சம்பந்த விசேடமன்றோ! அது கருதியே, "அறிவொளிபோல் பிரிவறும் அத்துவிதம்" என்று புடைநூலாசிரியரும் கூறினர். ஆதலால், முதல்வனும் உயிரை அதிட்டித்து நின்றே எத்தொழிலுஞ் செய்வானாவன். ஏனெனில், உயிர் ஒன்றினை யறிதல், முதல்வன் உடனின்று அறிதல் மாத்திர மில்லாமல் அறிவித்தல் மாத்திரையாலும் அமைந்து நிற்பதால். இது கருதியே, திருமாளிகைத் தேவர் திருவிசைப் பாவினுள்ளும், "தொண்டனேன் நினையுமா நினையே" "விரும்புமா விரும்பே" "தொடருமா தொடரே" என்றும், காரைக்காலம்மையாரும், "அறிவானுந்தானே ; அறிவிப்பான் தானே, அறிவாய் அறிகின்றான் தானே" என்றும் கூறினர்.

இச்சூத்திரத்தினுள் "காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம்போல் காணவுள்ளத்தைக் காட்டக் காண்டல்" என்பது ஓரதிகரணமாகவும், அதனை, "அயரா அன்பில் அரன் கழல் செலும்" என்பது ஓரதிகரணமாகவும் ஆக இரண்டதிகரணங்களாகப் பங்கிட்டுள்ளவர் முதல்வனும் உயிர்களால் உணரப்படும் விடயத்தை உடனின்று உணர்வன்; உயிர்க்குக் காட்டும் உபகார மாத்திரையே அன்று என்னும் அத்துவித நிலை உணர்த்துதற்கு ஈண்டும் அவனும் அவற்றினது விடயத்தை வுணரும் என்று கூறினர். அதுவன்றி, இந்நூல் இரண்டாஞ் சூத்திரத்தும், ஐந்தாஞ் சூத்திரத்தும் "அவையே தானேயாய்" என்றும், "தாம்தம் உணர்வின் தமியருள்" என்றும் பொதுவகையால் சொல்லிய அத்துவித நிலையை இச்சூத்திரத்துக் காணும் உபகாரத்துள் வைத்து உணர்த்தி இனிது விளக்கியவாறும் ஆயிற்று.

அன்றியும், கண் ஜடப் பொருள் ஆகலானும், காண்டல் பயன் உயிர்க்கேயாகலானும், கண் ஒன்றைக் காணுங் காலத்து உயிரும் உடனின்று காண்டல் என்பது பொருந்தும் ; ஆயின், கண் போல் உயிர் ஜடப் பொருள் அல்லாமையாலும், உணர்தல் பயன் உயிர்க்கேயாகலானும், அதனை யெடுத்துக் காட்டி முதல்வனும் அவற்றினது விடயத்தை யுணருமென்றல் அமையாது என்னும் வாதிகளை நோக்கிக் கூறுவார் "இவ்வான்மாக்கள் அவனையின்றி யமைந்து ஒன்றையும் விடயியா ஆகலான்" என்று கூறினர். இதன் பொரு



ளாவது, விளக்கொளியானது கண்ணொளியோடு கலந்து அக்கண்ணொளியோடு பார்க்கும் உருவத்திலும் கலந்தாலன்றிப் பார்க்கவேண்டிய உருவத்தைப் பார்க்கவேண்டியதில்லாதது போல், அறிவிக்க அறியும் இயற்கையை உடைய உயிர்களும் முதல்வனுடைய உணர்வு தம்மொடு கலந்து நின்று தம்மோடுகூடச் சென்று விடயித்திலும் கலந்து நிற்குமாயின், அறிவு விளங்கி அறிய வேண்டுவனவற்றை யறியும் இயற்கையுடையனவே யல்லாமல், தனித்து அமையவும் ஆகாததாய்த், தனித்து ஒன்றனை விடயிக்கவும் மாட்டாததாய் உள்ளதால், அறிவு விளங்குதற்கண் மாத்திரமல்லாமல் விடயத்தைப்பற்றுமிடத்தும், முதல்வன் உடனின்று அறிதல் ஒரு தலையாகும் என்பதாம். முதல்வனையின்றியமையாமையில் காட்டு முபகாரம் விளங்கினாற்போல, முதல்வனில்லாது ஒன்றையும் விடயியாமையில், காணுமுபகாரம் இனிது விளங்குமென்பார், "அவனையின்றி யமைந்து ஒன்றையும் விடயியா ஆகலான்" என்று கூறினர். இக்கருத்துப்பற்றியே, வழி நூலாசிரியரும்," எவ்விடத்தும் இறையடியை இன்றியமைந்தொன்றை யறிந்தியற்றி யிடாவுயிர்கள் ஈசன் தானுஞ், செவ்விதின்உளம் புகுந்து செய்தியெலாம் உணர்ந்து சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்பன், இவ்வுயிர்கள் தோற்றும் போதவனையின்றித் தோற்றா இவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கும், அவ்வுயிர்போல் நின்றிடுவனாதலானு மானடியை யகன்று நிற்பதெங்கேயாமே" என்றுங் கூறினர் என்றனர்.

இது கேட்ட வாதியொருவன், பரமுத்தியும் உயிர்க்கு விடயமாவது ஒன்று இல்லாமையால் வழி நூலாசிரியர் எவ்விடத்து மென்றது எவ்வாறு அமையும் என்னலும், அது கருதியன்றோ "சுத்த அநுபவத்தைத் துய்த்தல் அணு" என்றும், "ஒன்றினின்று உணருமுண்மை" என்றும் பிற ஆசிரியர்கள் கூறினர். ஆதலால் பரமுத்தியில் உயிர் சிவாநந்தாநுபூதியை விடயித்தல் உண்டென்றும், அது முதல்வனையில்லாது ஆகாமையில், அம்முதல்வனும், அவ்விடத்து அவ்வநுபூதியை உடனின்று அறிவன் என்றும் கூறினாராயினர்.

இவ்விதங் கூறுதலும், "அவனும் அவற்றது விடயத்தை உடனின்று உணருவானாயின், அவற்றோடு அவனிடை அறிதலிடத்து உண்டாகும் வேற்றுமை யொன்றுமில்லை போலும்" என்னலும், அவனுக்குப் பதில் கூறுவார் போன்று, வேற்றுமையினையுங் காட்டி, காட்டிய அதனையும் வலியுறுத்துவார்,

"ஐந்தையும் ஒக்க வுணராத வற்றுணர்வ
தைந்தும்போல் நின்றுணரும் ஆகலான்—ஐந்தினையும்
ஒன்றொன்றாப் பார்த்துணர்வ துள்ளமே எவ்வுலகும்
ஒன்றொன்றாப் பார்க்கும் உணர்ந்து"

என்று கூறினர். இதன் பொருளாவது, ஆன்மாவானது சுவை யொளி ஊறு ஓசை நாற்றம் என்று கூறுகின்ற ஐந்தினிடத்தேயும், ஐம்பொறிகள்போல் அதுவதுவாய்க் கலந்து நின்று, உணரும் தகுதியுடையதனை யுணரும் தன்மையுடைத்தாக இருத்தலால், அவ்வைம்புலன்களையும், ஒரே காலத்து உணரமாட்டாது. அவ்வைந்தினையும் ஒவ்வொன்றாய் அறிந்து அநுபவிப்பதாகும்.

அதுபோல சார்ந்ததன் வண்ணமாய்ப் பலதிறப்படுதலில்லாமல், என்றும் ஒரு பெற்றியுடையதாகிய சிவம் எல்லா உயிர்களுடைய எல்லா விடயங்களையும் பொதுவகையாய் ஒரு காலத்தே முழுவதும் உணர்ந்து அவ்வுயிர்களுடன் நின்று, சிறப்பு வகையானும் அறியும் என்றவாறு.

இவ்வாறு கூறுதலும், ஆன்மாவானது, ஐம்புலனை விடயிப்பதுபோல், முதல்வனை விடயிக்கின்ற காலத்தும் முதல்வன் அவ்விதமே உடனின்று தன்னைத்தான் விடயிப்பன் எனின், "ஆன்மாச்சிரயம்" என்னும் குற்றமாகுமாதலால், அவனும் அவற்றது விடயத்தை யுணருமென்றல் எவ்விடத்துஞ் செல்லாது என்னும் வாதிகளை நோக்கி, அவ்விடத்தும் அவ்வாறு உணர்தல் உண்டு என்பதை யுணர்த்தி அதனை மேலும் வலியுறுத்துவார்,

"ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினன்—ஏகமா
உள்ளத்தின் கண்ணானன் உள்குவா ருள்கிற்றை
உள்ளத்தாற் காணானே உற்று"

என்று கூறினர். இதன் பொருளாவது, "முதல்வனைச் சார்ந்த இடத்து அவ்வண்ணமேயாய் ஒரு திறப்பட்ட ஆன்மா அவனோடு ஒற்றுமைப்பட்டு நின்று அவனது இரண்டு திருவடிகளை யுணரவே, அம்முதல்வன் அவ்வான்மாவுக்குப் பரபோகமாய் மேல் மேல் விளைகின்ற பொலிவினையுடையனாகலானும், அவ்விதம் உணருமிடத்து அவ்வான்ம ஞானத்தினிடத்து ஏகமாய் விட்டு நீங்காதவன் ஆகலானும், கருதுவார் கருதிய பொருளாகிய தன்னை அவரறிவோடு கூடி நின்று, அறியானோ என்பதாம்.

இனி, ஏகமாகி நின்றார்க்கு அவ்வியைபுபற்றி அறிவு, இச்சை, செயல்கள் மூன்றும் அவ்விடத்து விடயிக்கும் விதம் எவ்விதம் என்னும் வாதிகளை நோக்கி, இனிப்பத்தியினால் மறவாது ஏத்த அவனது சீபாதத்தை யணையும் என்றனர். பின்னும் பத்தியினால் மறவாது ஏத்தினும் அவனது சீபாதத்தை யணைதல் பரமுத்தியிலல்லாது முடியாது என்பாரை நோக்கி, "அவன் அன்னியமின்றிச் செய்வோர் செய்திப் பயன் விளைத்து நிற்றலான்" என்றனர். அதாவது அம்முதல்வன் வேறு நில்லாது செய்வோர் செய்வனவற்றையறிந்து அவ்வச் செய்திக்குத்தக்க பயனை மிகச் செய்யலாயின், அவ்வப்போதே விளைவித்தும் அல்லாவிடத்துக் காலாந்தரத்தில் விளைவித்தும் உடனாய் நிற்பனாகலான், இனிப்பத்தியினால் மறவாது ஏத்தவே, அம்முதல்வனது சீபாதத்தை யணையும் என்றனர்.

அது கேட்டவாதிகள் அரன்கழல் செல்லுதல் உடம்பை விட்டு நீங்கிய பின்னல்லாது, உடம்பையுடைய இடத்தும் கூடுமாயின், அது சூரியனது ஒளிபோல, பக்கத்தில் உள்ளார்க்கும் புலனாதல் வேண்டும் என்னலும், அது கூடாமையும் கூடும் விதமும் உவமை முகத்தான் விளக்கி ஏதுவை வலியுறுத்துவார்,

'அருக்கன்நேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்கு
இருட்கண்ணே பாசத்தார்க்கு ஈசன்—அருட் கண்ணாற்



பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோல்
நேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்"

என்றனர். இதன் பொருளாவது, சூரியன் எல்லார்க்கும் ஒப்ப நின்றாலும், அவன் ஒளி தன்னொளி கொண்ட கண்ணுக்கே யல்லாமல் ஒளி யிழந்தார்க்கு இரவினிடத்துத் தோன்றும் இருள்போன்றே நிற்கும். அதுபோல, முதல்வனும், எவ்விடத்தும் ஒப்ப நின்றானாயினும் மலம் நீங்கிய முத்தர்க் கல்லாது அம்மலமுடையார்க்கு அவ்விறைவன் அம்மலத்தின் கண்ணேயே ஆவன். ஜீவன்முக்தரும், மற்றவர்போல், உடலோடு கூடியிருப்பராதலால், பாசத்தாராகவே ஆவர். இதில் வேற்றுமை யென்னை யென்றால், ஏனைய தாமரைகளோடு ஒப்ப ஒன்றாக இருந்தாலும், பக்குவமுள்ள தாமரைகளைக் கூம்புதலை நீக்கி அலரச்செய்கின்ற சூரியன்போல், மற்றவர்கள்போல், ஒருடம்பிலிருந்து வாழினும், பக்குவமென்னும் பருவமுடையராய், பத்தியினால் தன்னை மறவாது உணர்வார்க்கு முதல்வன் தனது திருவருட் பார்வையால் பாசத்தை நீக்கி அறிவைஅலர்த்துவன். ஆதலால், ஜீவன்முக்தர் உடம்பொடு கூடியிருப்பினும் அவர் பாசத்தாரல்லர் என்பதாம்.

இவ்விதங் கூறுதலைக்கேட்ட வாதியானவன் நேசத்தினால் தன்னை யுணரும் ஜீவன்முக்தருக்குப் பாசத்தை நீக்கி அறிவை விரியச்செய்தல் பரமுத்தியினல்லாமல் வேறு எக்காலத்துமில்லை என்று முரண்படக் கூறுதலும், அவனைநோக்கிப் பாசத்தை நீக்கி அறிவை விரியச்செய்யும் முறைமை இவ்விதம் என்று உணர்த்தி அதனை வலியுறுத்திக் கூறுவார்,

"மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனை மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் றான்"

187/68

என்று கூறினர். இதன் பொருளாவது, உயிரைத் தானாக்கிக் கொள்ளுமிடத்து உண்டாகிய இச்சை மிகுதியால் அவ்வுயிரோடும், நிலைபெறும் முதல்வன், கண்ணின்கண் நிலைபெறும் இருளை வளர்பிறைச் சந்திரனானவன் நாள்தோறும் சிறிது சிறிதாக நீக்கி ஓட்டுவதுபோல், அவ்வுயிரிடத்து உள்ளதாகிய மலசத்தியை அவ்வப் பருவந்தோறும் சிறிது சிறிதாக சேர்பான் முறையென்னும் படிமுறையில் நீக்கிப் பற்றறத் துறந்து காந்தக்கல் இரும்பினை இழுத்துத் தன் வசமாகச் செய்வதுபோல், மலம் அவ்விதம் துறக்கப் படுந்தோறும் அம்முறையை அச்சத்தி பதிவித்து உயிரைத் தன்னிடத்தே வலித்துக்கொண்டு தன் வசமாகச் செய்து வருஞ்செய்கையில் அவனுக்கு ஒருநாளுஞ் சலிப்பில்லை. அங்ஙனம் சலியாது செய்துவருதலால் அவன் விகாரியாவானுமல்லன். காந்தம்போல தனது சந்நிதிமாத்திரையில் செய்யும் அம்முதல்வன் என்பதாம்.

இதுகேட்ட பாடாணவாத சைவன் உயிருக்குக் குணம்போல அநாதியாயுள்ள சகஜமலம் என்னும் ஆணவமலம் அவ்வுயிரின் வேறாய்த் துறக்கற்பாலதன்றாதலால், மேற்செய்யுளில் மலம் துறந்து என்று கூறியது அமை

யாது என்னலும், அவனை நோக்கி அருத்தாபத்தி அளவையால் வலியுறுத்திக் கூறுவார்,

"நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்று
நசித்திலதே லொன்றுவ தில்லை—நசித்துமல
மப்பணைந்த வப்பினுள மணைந்து சேடமாங்
கப்பின்று மீசன் கழல்"

என்று அருளினர். இதன் பொருளாவது, அரன்கழல் செல்லுமிடத்து அதனைக் கெட்டு ஒன்றுமோ கெடாது ஒன்றுமோ, என வினவினர்க்குக் கெட்டு ஒன்றுமெனில், ஆன்மா கெட்டுப் போதலால் ஒன்றமாட்டாது; கெடாது ஒன்றுமெனின், கெடாத இடத்து, இரு பொருளாய் நிற்றலால் ஒன்றுமாறு இல்லை. ஆதலால் அருத்தாபத்தியளவையின் வண்ணம் உப்புதனது கண்டிப்பு நீங்கி நீரில் ஒன்றுவதுபோல, தனது ஆணவமலம் கெட்டொழிய ஆன்மா அரன்கழலைப் பொருந்தி அவ்வரன்கழற்குச் சேடமாகும். அவ்விதம் சேடமாகிய ஆன்மாவிற்கு மறுபடியும் பிரிவு இல்லை என்பதாம்.

இவ்விதம் நான்காஞ் சூத்திரம் முதல், இச்சூத்திரம் வரையில் கூறிய கேவாலவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை என்னும் முத்திறத்து அவத்தைகளுள் தன் இயல்புக்குக் கேடில்லாமலே நிற்குமென்பதை உவமையில் வைத்து முன் கூறியதை வலியுறுத்திக் காட்டுவார்,

"பொன்வாண்முன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே யெங்குமாந் தன்மைபோல்—முன்வாண்
மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு
மலத்தி ரித்துச் செல்லும் வரத்து"

என்று கூறினர். இதன் பொருளாவது, சூரியன் காலைப் பொழுதில் மேகக் கூட்டத்தில் மறைந்தும், அம்மேகக் கூட்டம் சிறிது நீங்கியவிடத்துத் தன்னொளி யேகதேசமாய் ஒடுங்கிக் காணப்பட்டும், அம்மேகக் கூட்டம் பெருங் காற்றால் அடியுண்டு முழுவதும் விட்டு ஒழிந்த இடத்து, எவ்விடத்தும் தன்னொளியேயாகிக் காணப்படும் விதத்தைப்போல், அநாதியே தன்னறிவு மலத்துள் மறைந்து கேவலப்பட்டு, பின்பு கருவிகளோடு கூடி ஏகதேசமாய் அறிவு விளங்கி, ஐம்புலன்களை விடயிக்கும். பின்பு அம்மலத்தை முதல்வன் அருளால் பற்றறக்களைந்து, வியாபகமாகி அறிவு விளங்கி அவனது சீபாதத்தையணைந்து சுத்தப்படும் என்பதாம்.

இதனால், கேவலத்தில் ஆன்மா மலச்சத்தியுள் முற்றும் ஒடுங்கலும், சகலத்தில் ஒரு சிறிது மலம் நீங்கி அறிவு விளங்கலும், சுத்தத்தில் முழுவதும் மலம் நீங்கி இறைவன் திருவடியை அடைதலும் கண்டோம். இங்கு மலம் நசித்தல் என்பது அதனுடைய மறைப்பின் சக்தி மடங்கிக் கீழ்ப்படுகின்ற அளவேயன்றி, மலம் ஒழிந்து போதலென்பது அன்று.

**பதினோராஞ் சூத்திரம் முற்றிற்று.**

# சைவமும் உயர்குலமும்

உ
சிவமயம்

சிவாகம சங்கம்,
தேவக்கோட்டை,
19-9-32.

## திருவாளர் - ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களுக்கு,
சென்னை.

அன்புள்ள ஐயா !

"திருநாளைப்போவார்" எனத்தலைப்பிட்டுச் "சித்தாந்த"த்தில் தாங்களெழுதியிருக்கிறகட்டுரையில் எனக்குத்தோன்றிய சிலவற்றைத் தங்களுக்கு நேரில் தெரிவித்துத் தங்களருமையான மறுமொழியைப் பெற எண்ணி இக்கடிதத்தை யெழுதுகிறேன். தயவு செய்து வேற்றுமையாகக் கொள்ளாது மறுமொழி தருவீர்களென்று நம்புகிறேன்.

217-வது பக்கம் 2-வது பாராவில் "திருநாளைப்போவார் திருக்குலத்தவரும், ஏனைய உயர்குலத்தினரென்று செருக்கித்தருக்கி மலைவோரும்" என்றெழுதியிருக்கிறீர்கள்.

உயர்குலத்தினரை இவ்வாறு இழித்துக் கூறுதற்கு, தங்களுக்காவது தங்கள் குலத்தினர்க்காவது உயர் குலத்தினர் செய்த தீங்கென்னை ?

224-வது 2-வதுபாராவில் "தில்லைவாழந்தணர் நல்லொழுக்கமும் நற்சார்பும் உடையராய் நந்தனர் காலத்திலிருந்தமையால் இறைவன் திருவுளக் குறிப்பை நன்குயறிந்து கொண்டனர்."

ஷ்டி பக்கம் 4-வது பாராவில் "கல்நாருரித்தன்ன ஈரமிலா நெஞ்சுடைய தில்லை வாழ் ஐயர்கள்."

225-வது பக்கம் 4-வது பாராவில் "தில்லைவாழந்தணரும் உடன்செல்லச் சென்றெய்தி உள்புகுந்தார்." "ஈண்டு உம்மை இழிவு சிறப்பின்கண் வந்ததை நோக்குக."

இவை முன்னுக்குப் பின் முரண்படவில்லையா ? உம்மைக்குத் தாங்கள் கொண்ட பொருள் பொருந்துமா ? பொருந்துமாயின் இறைவன் திருவாக்கிற்கும், சேக்கிழார் திருவாக்கிற்கும், தாங்கள் மேலே கூறியதற்கும் முரண்படாதா ?

தாங்களே இன்னொருமுறை சிந்தித்துப் பாருங்கள். விருப்பமிருந்தால் பிறரையுங் கேளுங்கள்.

"திருத்தொண்டத் தொகையில் முதலில் வைத்தோதப்படும் தில்லைவாழந்தணரை வேண்டுமென்றே குறை கூறுவதாக ஒருவரும் எண்ணுதல் கூடாது" என்று மெழுதியிருக்கிறீர்கள். வேண்டுமென்று குறைகூறுதல் தவறென்பதை உணர்ந்திருக்கின்ற தாங்கள் தயவுசெய்து எழுதியது சரியா என்பதைத் திரும்ப ஆராய்ந்து மறுமொழி தர வேண்டுகிறேன்.

தங்களன்பன் :
போ. முத்தய்யா.

---

உ
சிவமயம்

சென்னை,
10-10-32

## சைவத்திருவாளர் - பொ - முத்தையபிள்ளை யவர்கட்கு,

பேரன்புமிக்க ஐயா,

தங்கள் கடிதத்தையும் எனது மறுமொழியையும் பல அன்பர்கட்கு உபயோகப் படும்படி இன்று "சித்தாந்தம்" பத்திரிகையில் வெளியிட்டுள்ளேன். "சாதி மெய்யன்பின் முன் நில்லாதென்பதையே இச்சரிதை வலியுறுத்தும். இவ்வொரு உண்மையை வலியுறுத்தவே இக்கட்டுரை எழுந்தது" என்று கட்டுரையின் நோக்கத்தை நான் கூறுவது தங்களுக்கும் உடன்பாடென் றெண்ணுகிறேன். இன்றேல் அதையும் மறுத்தெழுதியிருப்பீர்கள். எனவே சாரத்தை ஒப்புக்கொள்ளும் தாங்கள், சக்கையான சில

வாக்கியங்களை மட்டும் மறுப்பது சிறிது வியப்பாகவே உளது. எனினும் எனது மறுமொழி தருவல்.

"எனக்காவது என்குலத்தினர்க்காவது உயர் குலத்தினர்செய்த தீங்கென்னை?" என வினவுகின்றீர்கள். இவ்வினாவி லிருந்து சைவ வேளாளர் குலத்தை உயர் குலமாகத் தாங்கள் கருதவில்லையோ என்ற ஐயம் எழுகின்றது. பிராமணரே யன்றிச் சைவ வேளாளரை யுள்ளிட்ட நான்கு "வருணத்தவரும்" உயர் குலத்தோரே யென்பது சிவஞான போதம் அ - ம் சூத்திரம் - க வது உதாரண வெண்பாவில் "நற்சார்பில் வந்துதித்து" சித்தியார் - உ-ம் சூத்திரம் கூ0-வது பாட்டில் "தவஞ்செய் சாதியினில்" என்பவற்றின் உரையால் இனிது விளங்கும். சிவஞான நூல்களைப் பயில்வதன் முன்னர் உயர்குலத்தினர் என்று செருக்கித் தருக்கி மலைவோர் கூட்டத்தில் நானும் ஒருவனாகவே இருந்தேன். அந்நூல்களைப் பயின்று வருவதின் பயனாகக் குலம் பற்றிய செருக்கு, தருக்கம், மலைவு முதலியவற்றைத் திருவருளின் துணை கொண்டு என்னால் இயன்றவரை அகற்றி வருகிறேன் என்பதைத் தங்களுக்கு மிக மகிழ்வுடன் அறிவிக்கிறேன்.

எனக்கும் என் குலத்துக்கும் உயர்குலத்தினர் செய்யும் தீங்கு மிகக் கொடியது. அது என்னவெனில் நானும் என் குலமும் அநுட்டிக்கும் சைவசமயத்துக்குச் செய்யும் இடரே. அவ்விடர் குலம் காரணமாகச் செருக்கித் தருக்கி மலைவதேயாம். சித்தியார் உ-ம் சூத்திரம் கூக-ம் பாட்டில் "வாழ்வெனும் மையல் விட்டு" என்பதற்கு வாழ்வாவன-குலம் இளமை கல்வி செல்வம் அதிகாரம் என்னுமிவை. மையல் - செருக்கு என்று சிவஞான சுவாமிகள் உரைத்துள்ளார்கள். எனவே, குலச் செருக்கை விட்ட பிறகே சைவமாம் சமயத்தைச் சாரவேண்டும். அச்செருக்கை விடாதவர்கள் விபூதிச் சைவர்கள், உருத்திராக்கச் சைவர்கள், சிவபூசைச் சைவர்கள் முதலிய கூட்டங்களி லிருப்பரே யன்றி சைவமாம் சமயத்தைச் சார்ந்தவரும் ஆகார் என்பது வெளிப்படை. சித்தியார் - அ-ம் சூத்திரம் கக-வது பாட்டும் இதை வலியுறுத்தும். விரிக்கில் மிகப் பெருகும். சுருங்கக் கூறின் குலம் என்ற பேச்சு உள்ளவரையில் சைவத்தைச் சார்தலு மில்லை யென்பதே நான் சிவஞான சாத்திரங்களிற் கண்டது.

தங்கள் கொள்கை இதற்கு முற்றிலும் வேறுபட்டதென்பதை நான் நன்கறிவேன். சித்தாந்தம் மலர் உ-ல் தங்களுக்கும் உயர் திரு. மறைமலையடிகட்கும் நடந்த சொற்போர் தாங்கள் சென்ற ஆண்டில் "சிவநேசன்" 5-ம் ஆண்டு - உஉ-வது வார வெளியீட்டில் "விநாச காலே விபரீத புத்தி" என்றெழுதிய கட்டுரை முதலியவற்றால் அது விளங்கும். மீண்டும் இச் சொற்போரைப் புதுக்க நான் விரும்பவில்லை. புதுப்பித்தலால் நிலைத்த பயன் விளையாதென்பதை நான் நன்கறிவேன்.

இனி, தில்லை வாழந்தணரைப்பற்றிய நான்கு வாக்கியங்கட்கு விடை தருகின்றேன். நல்லொழுக்கமும் நற்சார்பும் உடையவர்கள் ஈரமிலா நெஞ்சமும் பெற்றிருத்தல் கூடும். ஈர அன்பினராயின் ஆராத காதல் ஒப்பரிதாய் வளர்ந்தோங்க உள்ளுருகும் நந்தனாரைத் தில்லை வாழந்தணர்கள் இறைவன் கட்டளை பிறக்கு முன்னரே திருமன்றில் வரவழைத்திருப்பர். தில்லை வாழந்தணரும் உடன் செல்ல என்றவிடத்து உம்மை இழிவு சிறப்பென்பது வெளிப்படை. உலகுய்ய நடமாடும் எல்லையினைத் தலைப்பட்ட உடனே நந்தனார் விதேகமுத்தியடைந்தார். நடமாடும் கூத்தப் பிரானை நாடோறும் தொட்டுப் பூசனை புரியும் அந்தணர் அத்தருணம் முத்தி பெறாது பருவுடல்களோடு வியப்புற்றனர். இதை நோக்கினால் உயர்வும் இழிவும் யாண்டையவென்பது புலனாகும்.

எனது நண்பர் பலர் இக்கட்டுரையைப் புகழ்ந்து பேசினர். எனது அருமைச் சிநேகிதர் திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் மட்டும் கட்டுரையின் நோக்கத்தை ஒப்புக்கொண்டு "உயர் குலத்தினர் என்று செருக்கித் தருக்கி மலைவோர்," "விபூதி உருத்திராக்க மணிந்து தேவார திருவாசகங்களை உரத்த குரலிற் பாடும் உயர் குலத்துப் புல்லுருவங்களுக்கு' என்ற சொற்றொடர்களை ஆக்ஷேபித்தார்கள். இச்சொற்றொடர்கள் உயர் குலத்தினரைப் புண்படுத்தும் நோக்கத்தோடு எழுதப்படவில்லை. "நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு" என்ற நியாயம் பற்றி உயிர் குலத்தினரின் செருக்கு மிகுதியைக் கடிவதற்கே உயர் குல நண்பன் ஒருவனால் எழுதப்பட்டனவென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்ஙனம் :

தங்களன்புள்ள அடியார்க்கடியேன்,

**ம. பாலசுப்பிரமணியன்.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# உமாபதிசிவனார் திரட்டியருளிய அருள்முறைத் திரட்டு உரை

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

(இதழ் அ, 240-ம் பக்கத் தொடர்ச்சி)

**(விளக்கம்)** 'பொல்லேன்' என்ற சொல் பொல்லாப்பு அல்லது பொல்லாங்கு என்ற பண்புப் பெயரடியாகப் பிறந்த உயர்திணை ஆண்பால் தன்மை ஒருமைக் குறிப்பு வினை முற்று. பொல்லாப்பு அல்லது பொல்லாங்கு என்ற சொல் குற்றம் என்னும் பொருளில் வந்தது. அல்லேன் - அன்மை என்னும் பண்புப் பெயரடியாகப் பிறந்த உயர்திணை ஆண்பால் தன்மை ஒருமைக் குறிப்பு வினை முற்று. குறி என்பது வாழ்க்கையின் குறிக்கோள். "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று அடிகள் திருக்கொண்டீச்சரம் தேவாரப்பதிகம் கூ-வது பாட்டிற் கூறினமை காண்க. கோலமாய நலம் - கோலம் = உடல் உரு. நலம் = அழகு. கண்டாரால் விரும்பப்படும் உடல் உருவழகு. நான் பொல்லேன் - மேலே கோலமாய் நலம் என்று உடல் நலம் குறிக்கப்பட்டபடியால் நான் என்ற சொல்லுக்கு உயிர் நலம் என்று பொருள் கூறப்பட்டது. 'நான் பொல்லேன்' என்பதற்கு 'நான்' என்னும் அகங்காரம் உடைமையால் குற்றமுடையேன் என்றலும் பொருந்தும். அக்குற்றமும் உயிர் நலம் இல்லாத குற்றம் ஆதலின் பொருள் வேறுபடாது. நடுவே நின்ற விலங்கு - மக்களுக்கு அடுத்துக் கீழும், ஓரறிவு முதல் நான்கு அறிவுவரை உள்ள உயிர்களுக்கு மேலும் உள்ளன விலங்குகள் ஆதலின், அவை 'நடுவே நின்ற விலங்கு' எனக் கூறப்பட்டன. விலங்கு அலாது ஒழிந்தேன் அல்லேன் - இங்கே விலங்கு என்ற சொல் விலங்குப் பண்பைக் குறிக்கின்றது. ஒழிதல் - விடுதல். இலம் - பண்புப்பெயர். வறுமை. இத்தேவாரப் பாட்டின் கருத்துக்களை அடிகள் பிறர்க்கு அறிவுறுத்துதற்காகத் தம்மே லேற்றிக் கூறினார் என்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது.

கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு
உருகிற்றென் னுள்ளமும்நானுங் கிடந்தலந்தெய்த் தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றிலாமையுங் கண்டிரங்காய் கச்சியேகம்பனே. ௨௫

**(உரை)** கச்சி ஏகம்பனே - திருக்கச்சியேகம்பத்தில் (காஞ்சிபுரத்தில்) எழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! திருஒற்றியூரா, திருஆலவாயா, திருஆரூரா - திருக்கச்சியேகம்பத்திலன்றித் திருவொற்றியூரிலும் திருவாலவாயிலிலும் திருவாரூரிலும் எழுந்தருளியிருக்கின்றவனே! உன்பாதமே காண்பதற்கு - உன் திருவடிகளையே நான் பார்ப்பதற்கு, கரு உற்ற நாள் முதலாக - தாயாரது கருப்பையில் நான் உரு அடைந்த காலம் தொட்டு, என் உள்ளம் உருகிற்று - எனது மனம் அன்பினால் உருகிக் கரைந்தது. நானும் கிடந்து அலந்து எய்த் தொழிந்தேன் - நானும் - உயிராகிய நானும் கருப்பையிற் கிடந்து துன்புற்று இளைத்தேன்; ஒருபற்று இலாமையும் கண்டு இரங்காய் - நின் திருவடிகளைத் தவிர வேறொரு பொருளிலும் நான்பற்றுவையாதிருத்தலை நீ அறிந்து என்மேல் இரக்கம் கொண்டு அத்திருவடிகளை எனக்குக் காட்டி அருளல் வேண்டும்.

**(விளக்கம்)** உன்பாதமே - ஏ இங்கே தேற்றப் பொருளில் வந்தது. என்னுள்ளமும் - உம் என்பது அசை நிலை. நானும் - இங்கே உம் என்பது எனது உள்ளம் அன்றி நானும்என இறந்தது தழீஇய எச்ச உம்மை. எய்த் தொழிந்தேன் - ஒழி, என்பது துணிவுப் பொருள் உணர்த்தும் விகுதி. எய்த்தேன் என்று பொருள்படும். திருவொற்றி

என்ற சொல்லுடனும் சேர்த்துப் பொருளுரைக்கப் பட்டது. வஞ்ச மனை வாழ்க்கை (மனம்) ஆசை நீக்கி - உலக இன்ப நுகர்வுகளைக் குறியாக உடைய இல்வாழ்க்கை இன்பம் தருவதுபோலக் காட்டித் துன்பம் தருதலால் அது வஞ்சமனை வாழ்க்கை எனக் கூறப்பட்டது. அறநெறிப்பட்ட சிற்றின்ப இல்வாழ்க்கையானது உயிர்ப்பற்றும் பொருட்பற்றும் உடையதாதலின், அவ்விருப்புக்களையும் நீக்கி ஒருமை மனத்துடன் சிவபெருமானைப் பற்றி நிற்கும் அடியார்களுக்கு அவ்வில்வாழ்க்கைபொருந்தாது என்பார், 'வஞ்ச மனைவாழ்க்கை ஆசை நீக்கி' என்றார். அதே கருத்தைத் திருஞான சம்பந்த அடிகள் திருச்சோற்றுத் துறைப்பதிகம் முதலாவது பாட்டில், "செப்பநெஞ்சே நெறிகொள் சிற்றின்பந், துப்பனென் னாதருளே துணையாக, ஒப்பரொப்ப ரொளிகொள் வெண்ணீற் - றப்பர் சோற்றுத்துறை சென்றடை வோமே" என்றும், திருநாவுக்கரசு அடிகள் கோயில் பெரிய திருத்தாண்டகப் பதிகம் ௫ - வது பாட்டில் "மடவாரோடும் பொருந்தணை மேல்வரும் பயனைப் - போகமாற்றிப் பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க்கென்றும் - பெருந்துணையை" என்றும் கூறியருளினர். மனம் என்றசொல் ஆசையுடனும் சேர்த்துப் பொருளுரைக்கப் பட்டது. மனம் செற்றம் - நீக்கப்படும் குற்றம் செற்றம் ஆதலின் செற்றமனம் என்பது மனம் செற்றம் எனமாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. குற்றம் (அவிச்சை) ஆசை செற்ற மனம் - இப்பாட்டிற் கூறப்பட்ட இந்த மூன்று குற்றங்களும் பிரகிருதி மாயா உலகபோக நுகர்வுகளுக்கு ஏதுக்களா யிருப்பன வாகும். இக்குற்றங்கள் மூன்றும் சிவபெருமானை நேரே உணரும் மெய்யுணர்தலுக்குத் தடைகளா யுள்ளன. திருவள்ளுவ நாயனுர் திருக்குறள் 36ம் அதிகாரம் மெய்யுணர்தல் 10-வது குறளில் இம்மூன்று குற்றங்களையும் காமம் (ஆசை) வெகுளி (செற்றம்) மயக்கம் (அவிச்சை) எனக் கூறுகின்றார். சைவசமய நூல்களிற் கூறப்பட்ட அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, வெகுளி (செற்றம்) ஆகிய பஞ்சக் கிலேசங்களில் அகங்காரம் அவிச்சையிலும் அவா ஆசையிலும் அடங்கும். ஆவித்தையால் ஆசையும் ஆசையால் செற்றமும் உண்டாகின்றன. செய்யுள் ஆதலின் இம்முறை பிறழ்ந்து மூன்று குற்றங்களும் கூறப்பட்டன. அன்பு சேர்த்தி - இங்கே அன்பு என்பது வேண்டா தொன்றும் வேண்டாது மேவும் நிலையாயுள்ள அயரா அன்பு (Whole - hearted unchanging impersonal love). என்பு அணிந்து-என்பு என்பது அயன் திருமால் இருவர்களுடைய எலும்புகள். அவர்களுடைய ஆயுள்முடிவில் சிவபெருமான் அவர்களுடைய எலும்புகளைத் தமது முதுகின்மேலே தரித்தருளுகின்றார். "நங்கா யிதென்ன தவம் நாம்போ டெலும்பணிந்து - கங்காளந் தோள்மேலே காதலித்தான் என்னேடீ - கங்காள மாமாகேள் காலாந்தரத் திருவர் - தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியருளி யிருத்தல் காண்க. எதிர்கொள் பாடி என்பது - என்பது என்ற சொல்லுக்கு முன் 'உள்ளது' என்ற சொல்லும் அதற்குப் பின் 'அறிந்து' என்ற சொல்லும் அவாய் நிலையான் வந்தன. அவை சொல்லெச்சங்கள். அடைவோம் - அடைந்து வழிபடுவோம் என்ற பொருளில் வந்தது. அது அடியார்கள் என்ற படர்க்கைப்பெயரையும் தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்று; நாம் என்ற தொகைச் சொல்லை எழுவாயாகக் கொண்டது. ஏ - ஈற்றசை.

## ௩. இருண்மல நிலை

மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையு மன்றே. உ௮

(உரை) மெய்ம்மையாம் உழவைச் செய்து - (ஒருவர் அந்தக் காணம் ஐம்புலன்களால் நுகரும் உலக இன்பமானது நிலையில்லாத சிற்றின்பம் என்றும் சிவனை அடைந்து



பெறும் இன்பமே நிலையான பேரின்பம் என்றும் தமக்குக் குரவன் அறிவுறுத்தின உண்மையைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிவுற அறிந்தபின்) சிவத்தன்மை என்னும் உழவைத் தமது உள்ளத்திலே உழுது; விருப்பு எனும் வித்தை வித்தி - அவ்வாறு உழுத உள்ளமாகிய நிலத்தில் சிவத்தை அடைதல் வேண்டும் என்ற விருப்பம் ஆகிய விதையை விதைத்து; பொய்ம்மையாம் களையை வாங்கி - அங்ஙனம் விதைத்த உள்ளமாகிய நிலத்தில் முளைத்து வளர்ந்த சிவத்தன்மையாகிய பயிருடன் வளர்ந்திருக்கிற பழைய மலவாசனையாகிய களையைப் பிடுங்கி எறிந்து; பொறை எனும் நீரைப் பாய்ச்சி- அவ்வாறு வளர்ந்த சிவத்தன்மையாகிய பயிர் காய்ந்துபோகாதபடி பிராரத்துவ வினையால் உடலுக்கு வருந்துன்பங்களைப் பொறுத்தல் என்னும் நீரைப் பாய்ச்சி; தம்மையும் நோக்கிக் கண்டு - அங்ஙனம் வளர்ந்து முதிர்கின்ற சிவத்தன்மையாகிய பயிரிலிருந்து வெளிப்படுகின்ற சிவத்தையும் அச்சிவத்தினுள்ளே ௩௬ தத்துவக் கூட்டங்களிலிருந்தும் வேருக விளங்குகிற தம்மையும் (உயிரையும்) உணர்ந்து; தகவு எனும் வேலி இட்டு - அங்ஙனம் சிவத்தினுள் விளங்குகிற தம்மிடத்தில் உயிர் உணர்வு (தற்போதம்) வந்து பொருந்தாதபடி தாம் சிவத்தைவிட்டுத் தனித்து நில்லாத சேடப்பொருள் என்ற உரிமையை நினைந்து அஞ்செழுத்தோதல், சிவோகம் பாவனை செய்தல் ஆகிய வழிகளால் தடுத்துக் காத்து; செம்மையுள் நிற்பர் ஆகில் - சிவத்தினுடன் ஒற்றுமைப்பட்டு நிற்கும் அத்துவித நிலையில் நிலைத்து நிற்பாராயின்; சிவகதி விளையும் - சிவபோகமாகிய தானியம் (பலனுக) விளையும்.

இந்த அருமையான தேவாரப்பாட்டு, சிவம் நிலையான பேரின்பந் தரும் மெய்ப்பொருள் எனத் தெளிந்த ஒருவர் அப்பேரின்பத்தை அடைதற்குத் தமது உள்ளத்தில் என்ன சாதனங்கள் செய்தல் வேண்டும் என்னும் அநுபவ உண்மையை, உழவன் ஒருவன் தனது நிலத்தில் உழுது தானியம் விதைத்துப் பயிர் செய்து தானியம் விளையச் செய்கிற உருவகத்தில் வைத்துக் கூறுகின்றது. இதனுல் சைவசமயம் செயல் முறைச் சமயம் என்பதும், சைவ சமயத்தில் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கூறப்படும் பேரின்பமானது எவராலும் தமது முயற்சியால் இம்மையிலேயே பெறப்படும் என்பதுங் கூறப்படுகின்றன. இந்தப் பாட்டிற் கூறப்படும் உழவன் தொழில் உருவகம், பரஞ்சோதி மாமுனிவர் திருவிளையாடற் புராணம் வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் ௬௭-வது பாட்டிலும் கூறப்பட்டிருத்தல் காண்க.

(விளக்கம்) மெய்ம்மை ஆகும் உழவைச் செய்து - மெய்ம்மை = சத்துத் தன்மை, உண்மைத் தன்மை, சிவத்தன்மை. (Reality) உழவைச் செய்தல் என்பது விதை விதைக்க நிலத்தை உழுது பண்படுத்தல்போல சிவத்தன்மையை அடையச் செய்யப் பயன் கருதாது மனம் மொழி மெய்களால் செய்யப்படும் செயல்களைப் பயின்று பயின்று உள்ளத்தைப் பண்படுத்தல் ஆகும். விருப்பு எனும் வித்தை வித்தி - விருப்பு - சிவத்தை அடைதல்வேண்டும் என்னும் பெரும் விருப்பம் (Intense desire). என்றும் என்பது எனும் எனக்குறுகி நின்றது. பின்னே வருகிற எனும் என்பதற்கும் இவ்வாறே கொள்க. விதை விதைத்தல் - என்பது ஒரு உழவன் தான் பெற வேண்டுமென்று விரும்புகிற தானியத்தைத் தனது நிலத்தில் விதைத்தல்போல, சிவத்தை அடைந்து பேரின்பம் பெற விரும்புகிறவர் அக்கருத்தைத் தமது உள்ளத்தில் உண்டாகச் செய்தல். பொய்ம்மை ஆம் களையை வாங்கி - பொய்ம்மை = அசத்துத்தன்மை, மலத்தன்மை, (Unreality) பொய்ம்மையாம் களையை வாங்குதல் என்பது உழவன் தான் விதைத்துப் பயிர் வளர்ந்திருக்கிற நிலத்தில் அப்பயிர் வளம்பெற உண்டாகும் பொருட்டு அதனுடன் சேர்ந்திருக்கிற களைகளைப் பிடுங்கி எறிதல்போலப் பேரின்ப விருப்பர், சிவத்தன்மைக் கருத்து உண்டாயிருக்கிற தமது உள்ளத்தில் அக்கருத்துத் தடையின்றிப் பெருகி வளரும் பொருட்டு அதனிடத்தில் சேர்ந்துள்ள பழைய மலவாசனையை நீக்குதல். பொறை எனும் நீரைப் பாய்ச்சி - பொறை = எடுத்த உடலில் பிராரத்

துவ வினையாலுண்டாகும் துன்பங்களை வெறுக்காது அமைதியுடன் பொறுத்தல். இனம் பற்றிப் பிராரத்துவ வினையால் வரும் இன்பங்களையும் விரும்பி மகிழ்ச்சி அடையாது நுகருதலும் கொள்ளப்படும். இவ்வெறுப்பு விருப்புக்கள் வழியில் பழைய மலவாசனை உள்ளத்திற் புகுந்து சிவத்தன்மையைக் கெடுக்கும் ஆதலின், "பொறை என்னும் நீரைப் பாய்ச்சி" என்றார். "கமையெலாமுடையராகிக் கழலடி பரவுந் தொண்டர்க் - கமையிலா அருள் கொடுப்பர்ஐயன் ஐயாற்றனார்க்கே" என அடிகள் திரு ஐயாறு திருநேரிசைப் பதிகத்தில் கூறியிருத்தல் காண்க. பொறை எனும் நீரைப் பாய்ச்சுதல் என்பது உழவன் தன் நிலத்தில் வளர்ந்திருக்கிற பயிர் கருகாது வளரும் பொருட்டு அந்நிலத்துக்கு நீரைப் பாய்ச்சுதல் போல, பேரின்ப விருப்பர் தமது உள்ளத்தில் பெருகி வளருகின்ற சிவத் தன்மை குன்றாதபடி தமக்குப் பிராரத்துவ வினையால் வரும் துன்ப இன்பங்களை உள்ளத்தில் யாதொரு எதிர்ப்பும் (Reaction) உண்டாகாதபடி வெறுப்பு விருப்புக்களின்றி அமைதியாய் நுகருதல். தம்மையும் நோக்கிக் கண்டு - தம்மையும் என்பதிலுள்ள 'உம்' இறந்தது தழீஇய எச்ச உம்மையாகச் சிவத்தை நோக்கிக் காணுதல் அன்றி என்னும் பொருள்பட நின்றது. தம்மையும் நோக்கிக் கண்டு என்பது உவமம் வெளிப்படக் கூறப்படவில்லை. தம்மையும் நோக்கிக் காணுதல் என்பது உழவன் தனது நிலத்தில் வளர்கிற பயிரிடமிருந்து தானியக் கதிர்களை வெளிப்படக் காணுதல்போல, பேரின்ப விருப்பர் தமது உள்ளத்தில் பெருகி வளரும் சிவத்தன்மையிலிருந்து சிவமும் அச்சிவத்தினுள்ளே அடங்கித் தாமும் (உயிரும்) வெளிப்பட்டு விளங்கக் காணுதல் ஆகும். முன் சிவமும் தாமும் வெளிப்படாமல் இப்பொழுது வெளிப்பட்டு விளங்குதற்குக் காரணம் மலம் நீக்கமும் அதுபற்றி மெய்ஞ்ஞானமும் (அருளறிவும்) உண்டாதலாகும். இக்கருத்தைப் பட்டணத்துப் பிள்ளையார் திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில் "நின் - தெய்வத் திருவருள் வந்து கிடைத்தலின் - மாயப்படலங் கீறித் தூய - ஞானநாட்டம் பெற்றபின் யானும் - நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும் - என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன் - நின்னிலை யனைத்தையுங் கண்டேன் என்னே - நின்னைக்காணுமாந்தர் - தன்னையுங் காணாத் தன்மை யோரே". என்று கூறியருளினமை காண்க. தகவு எனும் வேலி இட்டு - தகவு, உரிமை. தகவு என்னும் வேலி இடுதல் என்பது, உழவன் தானியக் கதிர்களை உடைய பயிர்களுள்ள தன் நிலத்தில் மாடு முதலாயின வந்து பயிர்களைத் தின்று சேதப்படுத்தாத வண்ணம் நான்கு பக்கங்களிலும் வேலிபோட்டுத் தடுத்தல்போலப் பேரின்ப விருப்பர் தம்முடன் (உயிருடன்) சிவத்தை விளங்கக் கண்ட தமது உள்ளத்தில் உயிருணர்வு (தற்போதம்) தோன்றி அவ்விளக்கக் காட்சியைக் கெடுக்காதபடி தாம் ஆண்டானாகிய சிவத்தைவிட்டுப் பிரிந்து தனித்து நில்லாத அடிமைப் பொருள் என்னும் தமது உரிமையை நினைந்து அஞ்செழுத் தோதல், சிவோகம் பாவனை செய்தல் ஆகிய வழிகளால் தடுத்துக்காத்தல் ஆகும். "சிவமான சிந்தையிற் சீவன் சிதைய" என்று திருமூலர் கூறுதல் காண்க. (2428). செம்மையுள் நிற்பராகில் - செம்மை = ஒற்றுமை. செம்மையுள் நிற்றல் = உயிர் சிவத்தினுடன் அத்துவிதமாய்க் கலந்து ஒற்றுமைப்பட்டு நிற்றல் - இதிலும் உவமம் கூறப்படவில்லை. உவமப்பொருள் மாத்திரம் கூறப்பட்டிருக்கிறது. உழவன் தன் நிலத்திலுள்ள தானியப்பயிர்க் கதிர்களைக் கண்ணுங் கருத்துமாய்ப் பார்த்து அவைகள் முதிர்ந்துவிளையுமாறு செய்தல்போல, பேரின்ப விருப்பர் தமது உள்ளத்தில் அடைந்திருக்கிற அத்துவித அநுபவ நிலையில் உறைத்து நின்று அதனை முற்றும் வண்ணம் செய்தல் என உவமமும் உவமப் பொருளும் விரியும். சிவகதி விளையும் - சிவகதி = சிவபோகமாகிய பலன். இதுவும் உவமம் வெளிப்படக் கூறப்படவில்லை. உழவனுடைய நிலத்தில் தானியக் கதிர்கள் விளைந்து தானியத்தை அவனுக்குப் பலனாகக் கொடுத்தல்போல, பேரின்ப விருப்பருடைய உள்ளத்தில் முற்றிய அத்துவித அநுபவ நிலை அவருக்குப் பேரின்பத்தைப் பலனாகக் கொடுக்கும் என உவமமும் உவமப் பொருளும் விரியும். அன்று - ஏ - ஆசை நிலைகள். ஒருவர் (பேரின்ப விருப்பர்) 'உழ



வைச்செய்து வித்தை வித்திக் களையைவாங்கி நீரைப்பாய்ச்சி நோக்கிக்கண்டு வேலியிட்டுச் செம்மையுள் நிற்பாரயின் சிவகதிவிளையும்' என முடிக்க. சிவகதி-எழுவாய். விளையும் - பயனிலை. உள்ளத்தில் (சிந்தையில்) வைத்து உயிர் சிவனைக் காணுதலைப் பற்றித் திருமூலர் திருமந்திரத்தில், " சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை-சிந்தையினுள்ளே சிவனும் வெளிப்படும்-சிந்தைதெளியத் தெளிய வல்லார்கட்குச்-சிந்தையினுள்ளே சிவனிருந்தானே" என்று கூறியருளினர். "செறிவிலேன் சிந்தையுள்ளே சிவனடி தெரியமாட்டேன்" என்றும், "ஊனையே கழிக்க வேண்டில் உணர் மின்கள் உள்ளத்துள்ளே" என்றும், "சிந்தையுள் சிவமதானார் திருச்செம்பொன் பள்ளியாரே" என்றும், திருநாவுக்கரசு அடிகள் பிற இடங்களிலும் கூறியருளினமை காண்க. இப்பாட்டில் "மெய்ம்மையாம் உழவைச்செய்து, விருப்பெனும் வித்தைவித்தி, பொய்ம்மையாங்களையை வாங்கிப் - பொறையெனும் நீரைப்பாய்ச்சி" என்பவற்றால் ஞானத்தில் சரியையும் சிவஞான போதம், ௮-ம் சூத்திரக் கருத்தும், தம்மையும் நோக்கிக்கண்டு, தகவெனும் வேலியிட்டு என்பவற்றால் சிவஞானபோதம் ௯-ம் சூத்திரக்கருத்தும், ஞானத்தில் கிரியையும் செம்மை யுள்நிற்பாரகில் என்பதனால் சிவஞான போதம் ௧0-ம் சூத்திரக் கருத்தும், ஞானத்தில் யோகமும், சிவகதி விளையும் என்பதனால் ஞானத்தில் ஞானமும் ௧௧-ம் சூத்திரக் கருத்தும் கூறப்பட்டன.

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகழியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே. ௨௯

(உரை) உடம்பு எனும்மனை அகத்துள் - (ஒருவன் தன்னுடைய) உடம்பு என்று கூறப்படும் வீட்டினுள்ளே ; உள்ளமே தகழியாக - உள்ளத்தை அகலாக வைத்து; மடம் படும் உணர் நெய் அட்டி - (அந்த உள்ளமாகிய அகலில்) அறியாமையைக் கெடுக்கின்ற தெளிவு உணர்வு என்னும் நெய்யைப் பெய்து ; உயிர் எனும் திரிமயக்கி - அந்த நெய்யில் உயிர் என்னும் திரியைக் கூடும்படி செய்து ; இடம்படு ஞானத்தீயால் - அந்த உயிர் என்னும் திரியில் எரிகிற வியாபக அறிவு என்னும் தீ ஒளியால் ; எரிகொள - (உடம்பு ஆகிய வீடு முற்றும்) ஒளி நிறைந்திருக்க ; இருந்து நோக்கில் - அமைதியாக (சிவபெருமானுடன் ஒன்றி) இருந்து அகக்கண்ணினாலே பார்த்தால்; கடம்பு அமர் காளை தாதை - கடம்பமரத்தடியிலே வீற்றிருக்கின்ற குமரக் கடவுளுடைய தந்தையாகிய சிவபெருமானுடைய ; கழல்அடி காணலாமே - வீரத்தண்டை அணிந்த இரண்டு திருவடிகளையும் உணர்ந்து பேரின்பம் அடையலாம்.

(விளக்கம்) இந்தத் தேவாரப்பாட்டு சிவபெருமான் உயிரின் உடம்பினுள்ளே இருக்கின்றான் என்றும், அவன் உடம்பினுள்ளே யிருந்தாலும் உடம்பை உறைவிடமாகக் கொண்டிருக்கிற உயிர் அறியாதபடி மறைந்திருக்கின்றான் என்றும், அவ்வாறு உடம்பினுள்ளே மறைந்து விளங்காமலிருக்கிற சிவபெருமானைக் கண்டு அவன் திருவடிகளை அடைதலுக்கு அவ்வுயிர் யாது செய்தல் வேண்டும் என்றும், உடம்பைக் குடியிருக்கிற வீடாக உருவகஞ் செய்து கூறுகின்றது. உடம்பு எனும் மனைஅகத்து - என்னும் என்பது எனும் எனக்குறுகியது - என்று கூறப்படும். மனை அகத்து = மனை உள்ளிடத்து; உள்ளம் - உள் + அம், உடலினுள்ளேயிருக்கிற கருவி யாதலால் உள்ளம் எனப்பட்டது. உள்ளுதற் கருவி யாதலின் உள்ளம் ஆயிற்றெனலும் பொருந்தும். உள்ளமானது உயிர் நினைத்து உய்த்துணர்ந்து அறிகின்ற கருவி. உள்ளம், மனம், சிந்தை நெஞ்சு என்பன ஒரு பொருட் சொற்கள். உள்ளமே என்பதிலுள்ள ஏ-பிரி நிலைப் பொருளில் வந்தது. அது சிவத்தை உணரும் கருவியாயிருத்தலால் ஏனைய கருவிகளினின்றும் பிரித்துக் கூறப்பட்டது. மடம்படும் உணர் - மடம் என்பது உலகத்தை மெய் என்றும் சிவத்தைப்

பொய் என்றும் மயங்கி அறியும் உலக அறிவு - அவித்தைஅறியாமை படுதல்கெடுதல் உணர்=உணர்வு - முதனிலைத் தொழிற் பெயர். உலகத்தை நிலையில்லாத பொருள் என்றும்சிவத்தை மெய்ப்பொருள் என்றும் சிந்தித்துத்தெளிதலால் உணரும் தெளிவறிவு (Intuition). இது சிவபெருமானுடைய சிறப்பியல்பை உணரும் தெளிவறிவு. உயிர் எனும் திரிமயக்கி - உயிரினிடத்துத் தெளிவறிவு உண்டானபொழுது அதனிடத்து சிவத்தின் வியாபக அருள் ஒளி வந்து சேர்தலால், அது திரி என உவமிக்கப் பட்டது - மயக்குதல் - கூட்டுதல், சேர்த்தல். இடம்படும் ஞானத்தீ - வியாபக அறிவாகிய தீ ஒளி. தீ என்பது இங்கே தீ ஒளியைக் குறிக்கிறது. சிந்தித்துத் தெளிந்ததனு லுண்டாகும் தெளிவு அறிவும் (குறைந்த) ஞானமாதலன்றி முற்றிய அநுபவ ஞானமாகாமையால் வீட்டின்பம் அடைதற்கு சிவத்தினுடைய அருட்பேரொளியாகிய வியாபகஅறிவு அத்தெளிவறிவுடன் கலத்தல் வேண்டும் என்பது கூறப்பட்டது. கடம்பு அமர் காளை - முருகக் கடவுள். எப்பொழுதும் இளங்குமரன் ஆதலின் அவனைக் காளை என்று அடிகள் கூறினர். கழல் - அடியார்களுடைய இடரை ஒழிக்கும் வீரத்தையும் அவர்களுக்கு வீட்டின்பம் கொடுக்கிற கொடையையும் குறிக்கிற கால் அணி. காணல் - உயிர் சிவத்தினுடன் அத்துவிதமாய்க் கலந்து மெய்அறிவால் உணர்தல். அவ்வாறு உணர்தலே பேரின்பம் அடைதல் ஆதலின் காணல் என்பதற்கு உணராது பேரின்பம் அடைதல் என்று பொருளுரைக்சப்பட்டது. ஏ - ஈற்றசை. ஒருவன் தான் குடியிருக்கிற வீட்டில் ஒரு அகல் வைத்து அதில் நெய் பெய்து திரி இட்டு அத்திரியில் விளக்குப் பொருத்த, அவ் விளக்கொளி அவன் கண்ணொளியுடன் கலந்து அவ்வீட்டினுள் முன் மறைந்துகிடந்த ஒரு மாணிக்கத்தை அவனுடைய புறக்கண்களுக்குத் தெளிவாய் விளக்குதல்போல, ஒருவன் தனது உயிர் உறைவிடமா யிருக்கிற உடலிலே யுள்ள உள்ளத்தில் சிவபெருமானுடைய சிறப்பியல்பைச் சிந்தித்துத் தெளிய அத்தெளிவு அறிவுடன் சிவபெருமானுடைய வியாபக அறிவு சேர்ந்து அவனுடைய அகக்கண்ணுக்கு முன் அவனுடைய உள்ளத்தில் மறைந்திருந்த சிவபெருமானை விளக்கிக் காட்டும் என இப்பாட்டினுடைய உவமமும் உவமப் பொருளும் விரியும்.

வானமிது வெல்லாம் உடையான் தன்னை
வரியரவக் கச்சானை வன்பேய்சூழக்
கானமதில் நடமாட வல்லான் தன்னைக்
கடைக்கண்ணால் மங்கைஉமை நோக்கா வென்மேல்
ஊனமது வெல்லா மொழித்தான் தன்னை
உணர்வாகி அடியேன துள்ளே நின்ற
தேனமுதைத் தென்கூடற் றிருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

(உரை) நான் - நான் ; வானம் இது எல்லாம் உடையான் தன்னை - துறக்க உலகம் நில உலகம் முதலிய எல்லா உலகங்களை உடையவனும் ; வரி அரவக் கச்சானை - வரியையுடைய பாம்பைக் கச்சாக (அரையிலே) கட்டினவனும் ; வன்பேய்சூழக் கானம் அதில் நடமாட வல்லான் தன்னை - வலிய பேய்கள் தன்னைச் சூழ்ந்துநிற்கச் சுடுகாட்டில் சங்கார நடனம் ஆடுகின்ற வலிமை உடையவனும் ; மங்கை உமை நோக்கா கடைக்கண்ணால் - (தனது இடது பாகத்திலுள்ள) உமாதேவியாரது அருள் நோக்காகக் கண்ணைக் கடைப்பக்கத்திற் சாய்த்துப் பார்த்து ; என்மேல் ஊனம் அது எல்லாம் ஒழித்தான் தன்னை - என்னிடத்தி லுள்ள குற்றங்களை எல்லாம் நீக்கினவனும் ; அடியேனது உள்ளே - அடியேனுடைய உள்ளத்தினுள்ளே ; உணர்வாகி நின்றதேன் அமுதை - நான் உணரும் உணர்வாகித் தேன் போலவும் அமுது போலவும் நின்று நிலையான இன்பம் தருகின்றவனும் ; தென்கூடல் திருவால வாய்ச்சிவன் - தென்னாட்டிலே கூடல் என்னும் திருவாலவாயின் (மதுரையின்) கண் எழுந்தருளி யிருக்கின்றவனும் ஆகிய சிவபெருமானுடைய ; அடியே - இரண்டு திருவடிகளையே; சிந்திக்கப்பெற்றேன்- சிந்திக்கப் பெறும் பேற்றினைப் பெற்றேன் ; இப்பேறு கிடைத்தற்கு அரியது என்பது குறிப்பெச்சம்.

# ஆன்மா வேறு சீவன் வேறு

[ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள், யாழ்ப்பாணம்]

ஆத்மா என்னுஞ் சொல் வியாபகமுடையது என்னும் அதன் உண்மை நிலையை யுணர்த்தும். சீவன் என்பது ஆத்மாவின் உண்மை நிலைக்குப் பெயராக மாட்டாது. உபாதி நிலையுள்ளும் சீவசப்தம் ஓரவதாரத்தையே யுணர்த்தும். சேதனமாய் வியாபகமாம் இயல்புடைய ஆன்மா, ஆணவம், கன்மம், மாயை என்னு மலங்களோடு கூடிச் சோபாதிகனாய் நிற்கும்போது ஓரவதாரத்தில் சீவன் என்னும் பெயர் பெறுகின்றது.

படிகம்போலச் சார்ந்ததன் வண்ணமாமியல்புடைய ஆன்மா, ஆணவ மலத்தோடு கூடிய அதன் வண்ணமே தன் வண்ணமாகக் கொண்டு ஒன்று மறியாதிருக்கும். அந்நிலையில் ஆன்மாவின் இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தியாகிய இவை அம்மல மறைப்பினால் விளக்கமுறாது மடங்கி நிற்கும். பின்பு முதல்வன் உயிர்கள் மேல் வைத்த இரக்கத்தினாலே அவ்விச்சா ஞானக்கிரியா சத்திகளை ஏகதேசத்தின் விளக்கியுபகரிக்குமாறு அசுத்தமாயையைக் கலக்குவன், அதனால் அசுத்தமாயையிலிருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவங்கள் தோன்றி ஆன்மாவின் இச்சா ஞானக்கிரியைகளில் ஏகதேசத்தை விளக்கும். அப்பொழுது ஆன்மா அவற்றோடு கூடி போத்திருத்துவ மெய்திப் புருட தத்துவனாய் நிற்பன். போத்திருத்துவ மெய்தலாவது நானே போகங்களை நுகர்பவன் என்னும் எண்ணங்கொள்ளுதல், புருட தத்துவனான ஆன்மா அந்நிலையில் மூலப் பிரகிருதியில் நின்றும் உதித்த சாத்துவிகம், இராசதம். தாமதம் என்னும் முக்குணங்களோடு கூடுவன் அவற்றுள் இராசத குணம் எவற்றிலும் இச்சையை விளைவிக்க சாத்துவிக குணம் அப்புருடனுக்கு இன்பானுபவத்தை யூட்டும். தாமத குணம் துன்பானுபவத்தை யூட்டும், புருடன் அவற்றோடு கூடி இன்பம் துன்பம் நுகர்வன், அப்படி ஆன்மா புருடனாய் இன்ப துன்ப நுகரும் அந்நிலையில் (சீவன்) எனப்படுகின்றான்.

ஆதலால் ஆத்மா என்பதும் சீவன் என்பதும் தம்முள் வெவ்வேறான நிலைகளை யுணர்த்தும் பெயர்களாயுள்ளனவாம் என்பதை யறிக.


**UNIQUE PHILOSOPHICAL WORKS**

BY D. GOPAUL CHETTY

*Late Editor, "New Reformer" Madras*

**CHIDAMBARA RAHASYAM REVEALED**

Philosophical secrets of worship at Chidambaram are here scientifically explained for the first time. Price Re. 1.

**SAIVAISM, THE RELIGION OF THE ANCIENT BRITONS**

Another first book of its kind. *The "Hindu Organ" says of this* :—"It will thus be seen that Mr. Chetty has done ample justice to the theory he advances." Price As. 8.

**பதி பசு பாச விளக்கம்**

**(தமிழ்மொழி பெயர்ப்பு)**

சைவ சித்தாந்தத்தின்படி திருச்சிராப் பள்ளி தமிழ் வித்துவான் திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் கூறுவது: "தத்துவ ஆராய்ச்சி செய்யும் ஒவ்வொருவரும் அவ் வுண்மைகளைப் புதிய முறையில் வெளிப்படுத் தும் இந்நூலை வாங்கிப் படித்தலால் நல்ல பய னெய்தலாகும். இந்நூலைப் படித்தலால் என் அறிவிற்குத் தெளிவுண்டாகின்றது. (504 பக்கங்கள்) விலை ரூபா ஒன்று.

பரம இச்சா ஞான தீபிகை :—(தமிழ்மொழி பெயர்ப்பு) விலை அணா 8.

*All these books have been universall spoken of highly.*

Apply for copies to :—

D. GOPAUL CHETTY.
Royapettah, Madra

தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுஈ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி

---

ளாகிய இடங்கள் எனப் பொருள் கொள்ளுவாருமுளர். துரியம், மூன்றவத்தைக்கும் அப்பாற்பட்ட நிலை. அதனையே உபநிடத முதலிய நூல்களில் முடிவான நிலையாகக் கூறுவர். அதற்கும் அப்பாற்பட்டவன் முதல்வனென்பது சித்தாந்தக் கருத்து.

**உரை (ககூஎ - உகச):—** தொளைக்கப்படாத தூய முத்தாகிய ஒளியே, வணக்கம். ஆட்பட்டவர்கட்கு ஆதரவானவனே, வணக்கம். தெவிட்டாத அமுதமே, அளவிடப்படாத அருளே, வணக்கம். ஆயிரம் பேருடைய அண்ணலே, வணக்கம். தாளிக் கொடியின் தழையும் அறுகம் புல்லும் கலந்து கட்டியமாலை யணிந்தவனே, வணக்கம். நெடிய சோதியாய கூத்தனே, வணக்கம். சந்தனத் தேய்வையணிந்த அழகனே, வணக்கம். எண்ணுதற் கெட்டாத தூயபொருளே, வணக்கம். மந்திர நூல் வெளிப்பட்ட மகேந்திர மலையில் வீற்றிருந்தவனே, வணக்கம். (அடியேங்களாகிய) எங்களை உய்யும்படி ஆட்கொள்பவனே, வணக்கம். புலியின் முலைப்பாலானது மானிற்குப் பயன்படும்படி அரு

திருப்பெருந்துறையில் அருளிய

# திருச்சதகம்*

பக்தி வைராக்கிய விசித்திரம்†

## க. மெய்யுணர்தல்

### கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து (உ)ன் விரையார்
கழற்கென், கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பிஉள்ளம், பொய்தான் தவிர்ந்து (உ)ன்னைப்போற்றி
சயசய போற்றியென்னுங், கைதான் நெகிழவிடேன் உடை
யாய் என்னைக் கண்டுகொள்ளே.

**உரை நடை :—** உடையாய் என்பதை முதலிற் கொள்க. உள்ளம் வெதும்பி யென மாறுக.

**உரை :—** (என்னை அடிமையாக) உடையவனே! (நின்பெருங் கருணைத் திறத்தை நினைந்து) உடம்பு தானே மயிர்க் கூச்செறிந்து நடுநடுங்க, உனது வாசனை பொருந்திய திருவடிகளை (வணங்குவான்) எனது கைகள் தாமே தலைமேற் கூப்பப் பெற்றுக் கண்களினின்று (ஆனந்த) வெள்ளம் நிரம்ப, மனமானது, ஆர்வத்தால் வெப்பமுடைத் தாக, நிலையற்றவற்றின் பற்றுத்தானே நீங்கி யொழிய, உனக்கு வணக்கம். வெற்றி வெற்றி வணக்கம் என்றியம்பும் ஒழுக்கத்தையே நழுவ விடாது மேற்கொண்டு நிற்பேன். அடியேனைக் கண் பார்த்து எற்றுக் கொள்ளுக.

குறிப்பு :—தமது போன்பினால் இயற்கையா யெழும் மெய்ப் பாட்டினை அடிகள் குறிப்பித்தனர். உடல் நீத்து இரண்டறக் கலத் தலை, உடனே அருள் புரியவேண்டுமென்பார், 'கண்டு கொள்ளே' என்றார். 'கொள்,' என்பதைத் துணை வினையாகவும் 'எற்றுக்கொள் ளென்ற பொருளில் 'முதல் வினையாகவும்' கொள்ளலாம். மெய்ப்பாடு இயற்கையாக நிகழ்தலின், 'தான்' என்பது சேர்க்கப்பட்டது. 'விதிர் விதிர்த்து' முதலிய எச்சங்களைச் செயவெனெச்சத் திரிபாகக்கொள் ளுக. பாசப்பகை கெடுதலின், இறையருளுக்கு வெற்றி வெற்றி யென்றாரென்க. 'உடையாய்' என்பதற்கு 'எல்லாவற்றையு முடைய வனே' என்றும் பொருள் கொள்ளுவர். மனம் வெதும்பலும், பொய் தவிர்தலுஞ் செய்ய, உடம்பு மெய்ப்பாடுணர்த்த, வாயானது போற்றி சயசய போற்றி யென்னவே, முக்காரணங்களாலும், வழிபாடாற்றி னமை கூறியவாறும்.

* திருச்சதகம் = நூறு செய்யுட்களாலாகிய திருப்பாடற்றொகை.

† பக்தி வைராக்கிய விசித்திரம் = அன்பின் உறுதி யழகு.



க

கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே.

**உரை நடை :—** உத்தமனே, இறைவா, என்பதை முதற் கொள்க.

**உரை :—** எங்கள் (இருள் கடந்த) முதல்வனே, அரசனே, இந்திரன், பிரமன், திருமால் என்போர் பதவிகளை (ஒரு பொருளாகக்) கொள்ளமாட்டேன். எனது வாழ்க்கைக்கு ஈறு வந்தாலும், உன்னுடைய அடியாரோடன்றிப் பிறரோடு நட்புக் கொள்ளமாட்டேன். நரகம் புகுந்தாலும், அங்கே உனது திருவருளுணர்ச்சியோடு இருக்கப் பெற்றால், அதனை இகழமாட்டேன். உன்னை யொழிந்த வேறு கடவுளரை (மனத்தாலும்) நினைக்கமாட்டேன்.

குறிப்பு :—புரந்தரன் = (பகைவர்) ஊர்களை யழிப்பவன். அயன, பிறப்பிலானென்ற பொருளிற் பிரமனுக்கு உபசார வழக்கு. நள் = சிநேகங் கொள்ளல், திருவருளாலே = திருவருளோடு. 'திருவருளாலே யிருக்கப்பெறின்' என்பதை முதற்கண் கொண்டு, 'கொள்ளேன்' முதலியவற்றிற்கும் அதனைச் சாரப்பொருள் கோடலுண்டு. வானவர் வாழ்வு, பந்தத்தையும், அடியாருறவு, வீட்டையும் பயப்பதாகலின் அவ்வாறு கூறினார். குடி = உடம்பு வாழ்க்கை. உத்தமன் என்பது இருளைக்கடந்தவன், முதலானவன் என்று பொருள்படும் வடசொல். திருவருளுணர்ச்சியோடு நரகிடை யிருத்தல் அரிதாகலின், 'பெறின்' என்

ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி

ளினவனே, வணக்கம். அலையுடைய கடலின் மேலிடத்தே நடந்தவனே, வணக்கம். கரிக்குருவிக்குப் பண்டைக் காலத்தே அருள்புரிந்தவனே, வணக்கம். வலிய ஐம்புல வேட்கைகள் அற்றொழியும்படி உள்ளத்திற் பொருந்தி யருளினாய், நினக்கு வணக்கம். நிலத்தின்கண் பொருந்தப் பழகிய பல்வகைத் தோற்றமுடையவனே, வணக்கம். முதலும் நடுவும் முடிவுமானவனே வணக்கம். நரகம், விண்ணுலகம், நிலவுலகம் என்ற மூவிடத்தும் புகாதபடி, மேலான வீட்டுலகைப் பாண்டியனுக்கு நல்கியருளினாய், நினக்கு வணக்கம்.

**குறிப்பு** (௧௯௭ - ௨௧௪) :—முத்தம் - முதன்மையானமணி என்று பொருள். 'தோளா' - குற்றமற்ற என்ற கருத்தைக் குறிக்கும். 'ஆரா' என்பதை அருளே என்பதோடுஞ் சேர்ப்பதுண்டு. 'ஆயிரம்' என்பதற்குப் பல என்று பொருள் கொள்வாருமுளர். அன்பர் சாத்திய பச்சிலை யெதுவும் இறைவர்க்கா மென்பது கருத்து. 'தாளியறுகு' என்பது, அறுகின் ஒருவகை யென்பாருமுளர். நீளொளியாய் நின்று அயனரிகளைக் கூத்தாட்டுவித்தவனாதல்பற்றி, 'நிருத்தா' என்றாரென்பாருமுளர். மகேந்திரத்தை 'மந்திரமா மலை' யென்று முன், கீர்த்தித் திருவகவலிற்கூறியதுங்காண்க. புலிநிறைந்த காடொன்றிலே, பெண்மானொன்று குட்டியை ஈன்று, ஒரு புதரடியில்விட்டு நீர்பருகச் சென்ற இடத்தே வேடன் அம்பால் இறந்தபோது குட்டியை நினைந்து வருந்திற்று. சிவபெருமான், பெண்புலி யொன்றையே அக்குட்டிக்குப் பால்கொடுக்குமாறு செய்வித்தனர். மான்குட்டி வளர்ந்து பிழைத்துக் கொண்டது. புல்வாய், ஒருவகை மான். வலைவீசிக் களிற்று மீன் கொண்ட காலை, இறைவன் அலைகடன்மிசை நடந்தனன். கரிக்குருவி ஆலவாயண்ணலைத் தொழுது உபதேசம் பெற்ற கதை, திருவிளையாடற் புராணத்துட் காண்க. 'சாந்து' என்பதற்குத் திருநீறு என்று பொருள் கொள்வாருமுண்டு.

**உரை** :—(௨௧௫ - ௨௧௭) நீக்கமில்லாமல் எங்கும் நிறைந்த ஒருவனே வணக்கம். செழுமை மிக்க மலர் நிறைந்த சிவபுரத்துத் தலைவனே வணக்கம். செங்கழு நீர்மாலை யணிந்த கடவுளே, வணக்கம்.



தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்த சொன்மாலை கொண்டருள் போற்றி
புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி

திருச்சிற்றம்பலம்

**குறிப்பு**:—(௨௧௫ - ௨௧௭) சிவபுரம், பார்மேல் உத்தரகோச மங்கையென்றுந் திருப்பெருந் துறையென்றுங் கூறுப. சிவலோகமென்பாருமுளர். இறைவன் ஆசிரியனாய் வந்த போது செங்கழுநீர் மாலை அணிந்தமை, கீர்த்தித் திருவகவலுட் கூறப்பட்டது.

**உரை** (௨௧௮ - ௨௨௫) :—வழிபடுவாரது மயக்கத்தை அறுப்பாய், நினக்கு வணக்கம். தவறு யாது, பொருத்தம் யாதென்றறியா நாயினேன், தொடுத்த மொழித் தொடரை ஏற்றுக்கொண்டருள்வாய், வணக்கம். ஊர்கள் பலவற்றை யழித்த பண்டையோனே, வணக்கம். மேலானவற்றிற்கு மேலான ஒளியுடைய மேலோனே, வணக்கம். வணக்கம், வணக்கம். பாம் பணிந்த பெரியோனே, பழமையின் காரணனே, வணக்கம், வணக்கம், வணக்கம், வணக்கம், வெற்றி, வெற்றி (மிக்கோனுக்கு) வணக்கம்.

**குறிப்பு** (௨௧௮ - ௨௨௫):—குழைத்தல்=கூட்டுதல். 'புரம்பல' என்பதற்கு முப்புரமெனவும் பொருள் கொள்வதுண்டு. திரிபுர தகனம், பல்லூழிகளிற் பலவா மென்பாருமுளர். 'புரம்பல' உடல் பல என்று கொண்டு, பல் பிறவியையும் 'அருட் பெருந்தீயால்' அழித்தவன் என்றுங் கொள்க. எக்காலத்தும் எவ்வுயிர்க்கும் பிறவியறுப்பவன் சிவனாதலின், அவன் 'புராணன்' எனப்பட்டான். புயங்கம்= பாம்பு, உலகை நடத்தும் பல சடசத்திகட்கும் அது அறிகுறி. காரணேசுரராகிய ஐவர்க்குங் காரணனாய்த் தனக்கொரு காரணமுமில்லாதோனாதலின், 'புராண காரண' என்றார். இறைவன் அருள் வெற்றியே நிலை பெறுதலின், வெற்றி, வெற்றி போற்றி யென்றருளினர்.

ளார். திருவருளின் கட்டளையாலே அல்லது திருவருள் என்னை நிட் கிடையிருக்குமாறு பணிப்பின், என்றும் பொருள்கொள்ளுப. ௨

உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மால்இவன் என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்தெவரும்
தத்த மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல் சாவதுவே.

உரை :—(தேவருள்) முதன்மையானவனும் எந்தையும் எம்மை உடையானுமாகிய (பெருமானுடைய) திருவடிகளையே எண்ணிக் கசிந்து, மனக்களிப்பு மிக்க பித்தன் இவன் என்று தத்தம் உள்ளக் கருத்திலே பொருத்தமானவையாகத் தோன்றியவற்றை யெல்லாம் ஊரார் கூறியிடும்படி, ஊர்தோறுந் திரிந்து, எத்தகையோரும் தங்கள் தங்கள் மனம்போனவாறு நம்மைக் குறை கூறவும், (அவற்றாற் சிறிதும் நலிவுறாது) செருக்கற்றுச் செயலற்றிருத்தல் எந்த நாளிலே நிகழ்வதாகும்?

குறிப்பு :—மத்தம் = உன் மத்தம், பெருங்களிப்பு. மால் = மயக்கம், பித்து, மாலுடையானுக்கு ஆகுபெயர். உலகர் பேசுவது பல திறப்படுதலின் 'ஒத்தன ஒத்தன' என்றார். திருப்பதிகள் தோறுஞ் சென்று இறைவனை வணங்குதலையே "ஊரூர் திரிந்து" என்பதாற் கொள்ளுதலுமுண்டு. மனநினைவில், தங்கள் தவறிய உள்ளக் கருத்தில்' என்பது குறிப்பு. எவரும், பெரியருஞ் சிறியருமாகிய எத்திறத்தாரும். சாதல் - யான் என்ற முனைப்பொழிதல், செயலற்றிருத்தல். ஒத்தனசொல்லுதல், என்பது தம்மூரவர் தன்மை கூறுதலையும், 'மனத்தன பேசுதல், அயலூரார், வைதல் முதலிய இகழுரை பகர்தலையும் குறிக்குமென்ப. ௩

சாவமுன் னாள்தக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சம்அஞ்சி
ஆவஎந் தாய்என்(று) அவிதா இடும்நம் மவர்அவரே [மேல்
மூவரென் றேஎம்பிரா னொடும் எண்ணி, விண் ணாண்டுமண்
தேவரென் றேஇறு மாந்தென்ன பாவம் திரிதவரே.

உரை :—முன்னொரு காலத்திலே, தக்கன் இயற்றிய யாகத்திலே கொல்லப்பட்ட ஆட்டின் ஊனைத் தின்று, (பின்னர் வீரபத்திரர் தம்



மைத் தண்டிக்க வந்தபோது) சாவதற்குப் பயந்தும், பாற்கடலில் நஞ்சு எழுந்த காலத்தே சாவதற்கு அஞ்சியும், ஐயோ, எங்கள் அப்பனே (காப்பாற்று) என முறையிடுந் தன்மையுடைய,நம்மினத்தவராய (அயனும் அரியும்) தாமோ எம்பெருமானோடு மூவராகக் கருதப்பட்டு, விண்ணுலகை யாண்டு, தேவரென மண்ணுலகிற் செருக்கடைந்து திரிகின்ற தவமுடையோர்? (இங்ஙனந் தாழ்மைப்பட்டும் இவர் இறுமாந்திருத்தற்குக் காரணம்) என்ன பாவம்!

குறிப்பு :— 'தக்கன், சாவ' என்று உரைநடை கோடலுமுண்டு. 'அஞ்சி' என்பதைத் தின்று என்பதனோடும் 'நஞ்சம்' என்பதனோடுந் தனித்தனி கூட்டுக. ஆவ-ஆவாவென்பதன் குறுக்கம். அது, இரக்கக் குறிப்பு. அவிதா - ஆபத்தினின்று காப்பாற்ற முறையிடுங்காற் கூறுஞ் சொல். உருத்திரக் கடவுள் இறைவனோடு அத்துவிதக் கலப்புடைமையின், வேறு பிரித்தோதப்பட்டிலர். இறைவனே, யாண்டும் ஒடுக்கக்கடவுள் என்ற கொள்கையுமுண்டு. சகல வர்க்கத்தினராய்ச் சிவஞானம் பெறாத அயனரிமுதலியோர், நம்மைப்போலக் கட்டுநிலையிலுள்ள உயிரினத்தவராதலின், 'நம்மவரே' யென்றார். இதனில், ஏகாரம், வினாப் பொருளில் வந்து இழிவு குறித்தது. இறுதியில், 'திரிதவரே என்ன பாவம்' என மாறுக. ௪

தவமே புரிந்திலன் தண்மலர் இட்டுமுட் டா(து) இறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேன்உனக் கன்பருள்ளாஞ் [ன்
சிவமே பெறுந்திரு எய்திற்றி லேன்நின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாய்அடி யேற்(கு)எம் பரம்பரனே.

உரை நடை :—'எம்பரம்பரனே' என்பதை முதலிற்கொள்க.

உரை:—எமது மேலோர்க்கு மேலோனே, (ஐம்பொறி யடக்கமும் பிறர்க்கின்னல் செய்யாமையுமாகிய) தவத்தையே அடியேன் இயற்றுவதில்லை. நின்னைக் குளிர்ந்த மலர்தூவிக் குறைவில்லாத முறையில் வழிபாடு செய்யேன். வீணாகவே இவ்வுலகிற்றோன்றிய, கடத்தற்கரிய தீவினை யுடையேன், உனக்கு அன்பராயுள்ளார் நடுவி லிருத்தற்கு வேண்டுந் தூய நேர்மையை அடைதற்குரிய நல்வினைப்பயன் பெற்றிலேன். ஆதலின், அடியேனுக்கு நின்னுடைய திருவடிக்கு அடிமையாகின்ற பிறவியையே நீ அருளவேண்டும்.

குறிப்பு :— 'சிவம்' என்றசொல் தூய்மையையும், செம்மையையுங் குறிக்கும்; உயர்வு நன்மை. திரு=நல்வினைப் பயன், நல்லூழ்என்றும் பொருள் கூறுப. பவம்=பிறவி. கண்டாய் அசை. பரம்பரனே, என்பதற்கு, மிகவும் மேலானவனே, என்றும் பொருள் கூறுப. ரு

பரந்துபல் ஆய்மல ரிட்டுமுட் டாதடி யேஇறைஞ்சி
இரந்தஎல் லாம்எமக் கேபெற லாம்என்னும் அன்பர் உள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேஉன்றன் வார்கழற்(கு) அன்பெனக்
கிரந்தர மாய்அரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே. [கு

உரை நடை :—'நின்னை முழுவதுமே ஏத்த' என்பதை, 'உன்றன்' என்பதற்கு முன் அமைக்க.

உரை :—(பலபதிக்குஞ்) சென்று, பல்வகைப்பட்ட பழுதறத் தெரிந்தெடுத்த நன் மலரைத் தூவிக் குறைபாடில்லாது உன்திருவடியை வணங்கி (நின்பால்) வேண்டியனயாவையும் தங்களுக்கே கிடைக்கும் என்ற உறுதியுடைய அன்பரது நெஞ்சிற்கு ஒளித்து நில்லாது, (பிறர்க்கு, ஒளிக்கும்) மாயமுடையவனே, உன்னையே முற்றிலும் வாழ்த்தி வழிபடற்கு உன்னுடைய பெரிய திருவடிக்கட் செய்யு மன்பினை அடியேனுக்கு எப்போதும் நிலையாக நல்கியருள்க.

குறிப்பு :—'பரந்து' என்பதற்குப் 'பரவி' யெனப் பொருள் கொண்டு, அது துதித்தலைக் குறிக்கு மென்பாருமுளர். முட்டாதிறைஞ்சுதலால், எல்லாம் பெறலாம் என்பது கருத்து. உறுதியான சார்புடையார்க்கு இறைவன் வெளிப்பட்டு நிற்பனென்றார். கள்வன், தந்திரமுடையான். நிரந்தரம், இடையீடின்மை குறிக்கும் வடசொல்;

முழுவதுங் கண்ட வனைப்படைத் தான்முடி சாய்த்து
முன்னாள், செழுமலர் கொண்டெங்குந் தேடஅப் பாலான்
இப் பால்எம்பிரான், கழுதொடு காட்டிடை நாடகமாடிக் கதி
யிலியாய், உழுவையின் தோல்உடுத் து(உ)ன்மத்த மேல்
கொண்டு உழிதருமே.

உரை நடை :—'முன்னாள்' என்பதை முதலிற் கொள்க. 'இப் பால்' என்பதை 'கழுதொடு' என்பதோடு கூட்டுக.



உரை:—முற்காலத்திலே, எல்லாவற்றையும் படைத்தவனாகிய அயனைப் பெற்றோனாகிய அரி, தலை வணங்கி, வளமிக்க பூக்களைக் கையிற்கொண்டு திருவடி தொழுவதற்காக, எங்குந் தேடவும், அவனுக்குப் (புலனாகாது) அப்பாற் பட்டவனாகிய எமது வள்ளல், இவ்விடத்தே, பேயோடு சுடுகாட்டின் கண் கூத்தியற்றி, வறியனாய்ப் புலித்தோலுடுத்து, பித்துமேற்பட அலைந்து திரிவான். (இஃதென்ன வியப்பு.)

குறிப்பு:—கண்டவன்=படைத்தவன் ; அப்பாலன், அப்பாலானென்பதன் குறுக்கம் ; கழுது=பேய், எல்லாம் ஒடுங்கிய இடத்தே, தம்பாற்போன்புடைய அன்பர்பால் நட்ப ஐந்தொழிலியற்றுவதையே கழுதொடு காட்டிடை ஆடுதலாகக் குறித்தனர் போலும். கதியிலி=போக்கில்லாதவன். கதியிலி, என்பது இறைவன் ஒன்றைநாடிச் செலலும் அவசியமில்லான், என்பதைக் குறித்தவாறு. பூரணப் பொருளாகிய அவனுக்குச் செல்கதியாதுளது ? தாருக வனத்து முனிவர் மீமாஞ்சக நெறி நின்று, வேள்வியியற்றி விடுத்த புலியைக்கொன்று அதன் தோலைப் போர்த்தகதை வெளிப்படை. கூத்துக்களிப்பினை, உன்மத்தமென்றாரென்ப. அன்பர்க்கன்பனாதலின், இறைவன் பித்தனெனப் படுதல் தெளிவு. எ

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும்விண்ணும்
இழிதரு காலம்எக் காலம் வருவது வந்ததற்பின்
உழிதரு கால்அத்த உன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாய்அவை காத்தெம்மைக் காப்பவனே.

உரை :—அசையுந் தன்மையுடைய காற்றும், நெருப்பும், நீரும், மண்ணும் வானுமாகிய பூதங்கள், தத்தம் நிலையினீங்கி யொடுங்குங் காலம் எந்தக் காலமாகும். அக்காலம் வந்த பின்னரும் கூத்தியற்றுகின்ற திருவடியுடைய அப்பனே, நினது அடிமையாகிய யான் செய்த கொடிய வினைகளை யொழிக்கின்ற காலவெல்லையுமாய், நின்று (மேல் தாக்காமல்) அவ்வினைகளைத்தடுத்து, எங்களைக் காப்பாற்றியருள்பவனே.

குறிப்பு :—ஐம்பூதங்களாலாகிய உலகம் ஒடுங்கியபோதும், சூக்கும ஐந்தொழி லியற்றுதலின், 'உழிதருகால்' என்றார். உலக மொடுங்

உரை :—(எம்மை அடிமையாக) உடையவனே, உனது அன்பர் போல (அன்பில்லாதிருந்தும், அன்புடையான்போல) வஞ்சனையாக நடந்து காட்டி, அன்பர் வீடுசெல்வதற்கிடையே, யானும் முத்தியின்கண்போய்ச் சேர்தற்கு மிக அதிகமாகத் துரிதப்படுகின்றேன். பொன்னின் நலமுடைய மாணிக்க மலைபோலும் ஐயனே, உன்பால் எப்போதும் நிகழும் அன்பினை என்னெஞ்சினூடே நிலைபெறவும், அதனால் நெஞ்சமுருகவும் உதவியருள்வாயாக.

குறிப்பு :—நாடகத்தால், என்பதனை 'நாட்டகத்தால்,' என்பதன் திரிபாகக்கொண்டு, 'நாட்டகத்தில்,' அதாவது 'இவ்வுலகில்' எனப் பொருள் கொள்ளுதல், வலிந்து பொருள் கோடலாகும். 'நாடுகின்ற அகத்தால்,' வீடுநாடும் அவாவினால், என்று பொருள் கொள்ளுவதுமுண்டு. அன்பின்மையைப் பிறர் அறியவொண்ணாது நடப்பதே, நாடகத்தால் நடிப்பது. பிறர் அறிய நடப்பது, நடிப்பது மாத்திரையாகும் என்ப. அன்பர் தாம் வீடு செல்லுதற்குரியர், அவர் நடுவே விரைதல் உரிமையின்மையைக் குறிக்கும். அடிகள், உடல் நீத்து இறைவனோடு இரண்டறக் கலத்தலையே பெரிதும் விழைந்தவரென்பதற்கு இஃதே தெளிவான அகச்சான்று. ஆடகம் மாறின்மையையும், மாணிக்கம், செம்மேனியையுங்குறிக்கும். ஆர்கழல் செல்லுதற்குரிய அயரா அன்பினையே அடிகள் வேண்டினர். நின்று = நிற்க. ௧௧

யான்எதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்(கு) என்கடவேன்,
வானையும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்,
தேன்வயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம் பெருமான்எம்,
மானேயுன் னருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.

உரை :—அடியேன் பிறத்தற்கு ஒரு சிறிதும் பயப்பட மாட்டேன், இறத்தலுக்கு யாதும் அஞ்சக்கடவேனல்லேன். விண்ணுலகை (முழுதுங் கொடுத்தாலும்) அதனை விரும்பேன். உலகாள்கின்ற அரசனைச் சார்ந்து அவனைப்பேணி யொழுகவும் இருக்கின்றேனில்லை. தேன் பொருந்திய கொன்றைமலரணிந்த மங்களப் பொருளானவனே, எமது தலைவனே, எமது பெரியோனே, உன்னோடு இரண்டறக்



கலத்தற்கேது வாய) திருவருளை எய்துங் காலம் எப்போது எப்போதென்று எண்ணி மனம் உளைகின்றேன்.

குறிப்பு :—பிறப்புக்கும் இறப்புக்கும் அஞ்சாமையே குறித்தார். இறப்பிற்கு யாது செய்யக்கடவேன், என்று அஞ்சியதாகக் கூறுதல் தவறு. தேன் போன்ற இன்பம் நல்கும் மங்களமுடையானைச் சார்ந்த போது, பிறப்பிறப்பின்மையும், இறைவனைத் தலைவனாகப் பெற்ற போது, தாம் விண்ணவர் தலைவனுதலை விரும்பாமையும், இறைவனைப் பெரியனாகக் கொண்டவிடத்தே, மன்னனை மதித்து வாழாமையும் ஏற்படுமென்பது குறிப்பு. எம்மவன், எம்மானென்றும் தென்பாருமுளர். மான் என்பதற்கு மகான், என்று, பொருள் கொள்ளுவர். ௧௨

வருந்துவன்நின் மலர்ப்பாதம் அவைகாண்பான் நாயடியேன்,
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத் தழும்பேறப்,
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்,
வருந்துவன்நத் தமியேன்மற் றென்னேநான் ஆமாறே.

உரை நடை :—நாயடியேன் நின்மலர்ப்பாதம் அவை காண்பான் வருந்துவன்..........ஆமாறே.

உரை :—நாய்த்தன்மையுடைய அடியேன், நின்னுடைய பெருமைமிக்க திருவடிக் கமலங்களைக் காண்பதற்காக, மிகவும் கவலைப்படுகின்றேன். (உலகத்தே உடலுறுப்புக்களோடு) வாழ்ந்திருந்தும், உனக்கு நல்ல பூமாலை தொடுத்துச் சாத்தேன், நாவிலே தழும்புண்டாகும்படியாக உன்னை வாழ்த்தமாட்டேன், பொன்பொருந்திய மேருமலையை வளைத்தவனே, நினது அருளோடு கூடிய பேரின்ப அமுதத்தை எனக்கு நீ கொடுக்கமாட்டாயாயின், ஆதரவின்றித் தனிமையிற் கடைப்பட்ட யான் துன்புறுவேன், துன்புறாது நான் உய்யுமாறு வேறு எது செய்யவல்லேன். (ஒன்றுஞ் செய்யுந் திறமையிலேன்.)

குறிப்பு :—மலையை வளைத்த நீ, என் மனத்தை வளைத்தல் அரிதில்லையே, என்றவாறு. ந, மிகுதிகுறிக்கும். தனிமை மிகுதி கூறினார்.

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்

கிய காலை, ஞானிகளின் வினையொடுங்கவே, திருவடியிற் கலத்தல் நிகழும். உழிதா = திரி, அலை. காத்து = தடுத்து. அ

பவன்எம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்
பெருமான், சிவன்எம் பிரான்என்னை யாண்டுகொண் டான்
என் சிறுமைகண்டும், அவன்எம் பிரான்என்ன நான்அடி-
யேன்என்ன இப்பரிசே, புவன்எம் பிரான்தெரி யும்பரி சாவ
தியம்புகவே.

**உரை நடை:**—"எம்பிரான்பவன், பனிமாமதிக் கண்ணி விண்ணோர் பெருமான், சிவன், எம்பிரான் என் சிறுமை கண்டும் என்னை ஆண்டுகொண்டான். எம்பிரான்புவன் அவன் எம்பிரான் என்ன நான் அடியேன் என்ன இப்பரிசே தெரியும் பரிசாவது இயம்புகவே."

**உரை:**—எமது பெருமான், எல்லாம் தோன்றுதற்கிடமானவன். குளிர்ந்த சிறப்புடைய திங்களைத்(தலைமீது) குறுங்கண்ணியாக அணிந்த தேவர் தலைவன், (ஆதலின், எல்லாரையுங் காப்பவன்,) (எல்லாவற்றையும் ஒடுக்குவானாகிய) தூயோன், (அத்தகையானாகிய) எம்பெருமான், எனது (சிற்றறிவுஞ்சிறுசெயலுமுடைய) சிறிய தன்மையை அறிந்தும், (கருணையினாலே) தடுத்தாட் கொண்டனன். எனது வள்ளலாகிய அவன், தானே தோன்றிய சுயம்பு. அவன் எமது தலைவனாகவும் நான் அவன் அடியவனாகவுமிருக்கின்ற இம்முறையே எனக்குத் தெரியும் வகையாக, யான் சொல்லுவேனாக.

குறிப்பு :—பவன், பிறத்தற்கிடமானவன் பிரான். வள்ளல், உபகாரி; மலரினாலாகிய கண்ணியை முடியில் அணிதல்போலப் பிறையை இறைவன் சடையிலணிந்தமையால், மதிக்கண்ணி என்றார். மா, அங்ஙனம் அணியப்பெற்ற சிறப்பைக்குறிக்கும். பெரியோரால் ஏற்றுக்கொள்ளத் தகாத நிலையைச் சிறுமை என்றார். அடிகள் தமக்கு இறைவன் ஆண்டவன், தாம் அடிமை யென்பதே தெரியத்தக்கதாய்க் கூறத்தக்கதாயுள்ள கருத்தாமென்றனர். புவன் = சுயம்பானவன், ஒளியுடையவன். சிவன் = தூயோன், ஒடுக்கமுதல்வன். கூ

புகவே தகேன்உனக் கன்பருள் யான்என் பொல்லா
மணியே, தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப்



புன்மையரை, மிகவே யுயர்த்தி விண்ணோரைப் பணித்தி
அண்ணா அமுதே, நகவே தகும்எம் பிரான்என்னை நீசெய்த
நாடகமே.

**உரை நடை :**—என்பொல்லா மணியே, உனக்கன்பருள் யான் புகவே தகேன். உனக்கு எனையாட்கொண்ட தன்மை தகவே....... எம்பிரான்...நாடகமே நகவேதகும்.

**உரை :**—எனது தொளைபடாத மாணிக்கமே, உனக்கு அன்பராயினோர் நடுவே, யான் புகுதற்கே தகுதியில்லாதேன். என்னை உனக்கு ஆளாக்கிக்கொண்ட இயல்பு தகுதியுடைத்தாமோ. எத்தகைய கீழ்ப்பட்டோரையும் மேலாக உயர்வித்து, மேலான வானவரை அவருக்குக் கீழ்ப்படுத்துகிறாய். அப்பனே, அமுதனே, எம்பெருமானே, நீ என்பாற் செய்த கூத்து சிரித்து நகையாடற்கே உரியதாகும்.

குறிப்பு :—பொல்லா = பொள்ளா, பொள்ளுதல் = தொளைத்தல். குறைவில்லா முழு மாணிக்கம்போன்ற, பூரண ஆனந்த அறிவே யென்பது கருத்து. தன்னை ஆட்கொண்டதின் வைத்து, கீழோரை உயர்த்துவது மேலோரைத் தாழ்த்துவதுங் கூறினர். அண்ணா = மேலோனே. அமுது = சாவாமருந்து. ஆள் - அடிமை. அடிகளின் கழிபெருந்தாழ் மனத்தை இச்செய்யுளுணர்த்தும். கO

## உ. அறிவுறுத்தல்

[இப்பதிகத்தின் இறுதி யிரண்டு செய்யுளில் நெஞ்சிற்கு அறிவுரை பகர்தலின், 'அறிவுறுத்தல்' என்ற தலைப்பு அமைத்தனர் போலும். இப்பதிகத்தின் பிறசெய்யுட்கள் பெரும்பாலும் அருள் வேண்டும் விண்ணப்பமாகவே அமைந்துள்ளன.]

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் முடையானே.

**உரை நடை:**—'எம்முடையானே' என்பதை முதலிற் சொல்க.

விரவுவார் மெய்யன்பின் அடியார்கள் மேன்மேலுன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ அரியானே.

உரை:—தேவர்கள் உன்னை வாழ்த்துகின்றார்கள். அறிவுக்கு முதலாகிய (நால்வகை வாக்காகிய) நான்மறையும், உன்புகழையே ஒலிக்கின்றன. நறுமணம் பொருந்திய நீண்ட கூந்தலையுடைய இளம் பெண்ணாகிய உமையம்மை, உன்னுடைய ஒரு பகுதியாகிய (இடப்பாகத்தைப்) பெற்றிருக்கின்றாள். உண்மைப் பத்தியுடைய அடியார்கள் தொகுப்புத் தொகுப்பாக, உன்னை வழிபடக் கூடுகின்றார்கள். யாரும் அறிதற்கரியவனே, அராவிய பெரிய கழல்களணிந்த நினது இருதிருவடிகளையுங் காண்பது யாரோ? (நின்னை வழிபடுகின்ற இவர்கள் அனைவருந்) திருவடியைக் காண்பார்களோ, என்ற வினாவாக இறுதியடிக்குப் பொருள் கொள்ளுதலுமுண்டு.

குறிப்பு:—தேவர்களூ மறையும் இறையடி காணாமை கூறப்பட்டன. உமையம்மை, சிவத்தின் பகுதியாவளாதலின், அடியிணைகாணுங் கடப்பாடுடைய ளல்லள். மெய்யடியார் காண்பர், என்பது கருத்து என்ப. குரவு - குரவமலரையும், மணத்தையுங் குறிக்கும். விரவுதல், கலத்தல், கூடுதல். அரவு, என்பது, அராவு என்பதன் நடுக்குறையாகக்கொள்ளப்படும். அழுத்தல் என்றபொருளில், கழல்கள் அழுந்திய திருவடியெனக் கூறுவர். விண்ணவர் முடிபட்டு அழுத்தமுற்ற திருவடிகளென்பது முண்டு. அரவு, ஒலியெனப் பொருள்படு மென்று கொண்டு, ஒலிக்கின்ற கழல்களணிந்த திருவடிகள் என்றுங் கொள்க. காண்பு = காண்டல், காண்பது.

௧௭

அரியானே யாவர்க்கும் அம்பரவா அம்பலத்தெம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன் நயந்துருகேன்
தரியேன்நான் ஆமா(று)என் சாவேன்நான் சாவேனே.

உரை:—எத்தகையாருக்கும் அறிதற்கரியவனே, அருள்வானினை உடையவனே. தில்லையம்பலத்திலே நடமாடும் எமது பெருமானே, சிறுமை மிக்க அடியேனை ஆளாக்கிக் கொண்ட, செறித்த கழலினையுடைய திருவடிக் கண்ணே, மணம் நிறைந்த மலர்களை இட்டு வழி



உரை:—(வான் நின்று இறங்கிய கங்கை) வெள்ளமானது விழுந்து தங்குதற்கேற்ற விரிந்த சடையினையுடையாய், காளையை ஊர்தியாக உடையாய், தேவர் தலைவனே, என்று அன்பர் சொல்லக் கேட்டவுடனே, ஆர்வமிகுந்த மனத்தினராய், (மேட்டினின்று) பள்ளத்திலே விழுகின்ற மிகுந்த நீர்போல, மேல்கீழாக விழுந்து வணங்கி நெஞ்சந் துடிதுடித்து உருக்கங்கொள்ளும் சிறந்த அடியார் (உன் அருளை எதிர்பார்த்து நிற்க அவர்க்கதைக் கொடாது), தகுதியற்ற என்னைப் (பெருங்கருணையால்) ஆண்டுகொண்ட வுனக்கு, என் உள்ளங்கால் முதல் உச்சி வரையுள்ள உடம்பின் பகுதிகளனைத்தும் மனத்தி னியல்புடையதாய் (உருகவேண்டும், அப்படி) உருகவில்லை. மேலோனே! உடம்பு முழுவதுங் கண்ணின் இயல்புடையதாய் நீர் பெருக்க, அதன் வெள்ளம் (பாயவேண்டும், அப்படிப்) பாயவில்லை. ஆதலின், கொடிய வினையுடையேனுக்கு நெஞ்சானது கல்லினாலமைந்ததேயாம். இருகண்களும் மரத்தினாலாயவையேயாம்.

குறிப்பு:—அடிகளது ஆர்வமிகுதியை இச்செய்யுள் குறிக்கும். இறைவன் பெருங்கருணையை நோக்கத் தமக்கு அன்பின்மையும், அதற்குக் காரணம் தனது தீவினையுமென அடிகள் அறிவுறுத்தியவாறும். சடை, இறைவனது பேராற்றலைக் குறிக்கும். பகீரதன் கங்கை கொண்டுவந்த கதை வெளிப்படை. பெருவெள்ளம், ஒரு நீர்த்துளியாகச் சடையிற்றங்கிய தென்ப. விடை, நீதியை யுணர்த்தும். வேட்ட = ஆசைப்பட்ட. அண்ணா என்பதற்கு அண்ட முடியாத என்றும் பொருள் கொண்டு, வெள்ளந்தான் என்பதற்கு அதனை அடையாக்குவர் ஒரு சாரார்.

௨௧

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன்நான் என்று (உ)ன்னை அறிவித்தென்னை
ஆட்கொண்டெம் பிரான்ஆனாய்க்(கு) இரும்பின்
அனையநான் பாடேன்நின் றாடேன் அந்தோ [பாவனை
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவறியேன் முதலந்தம் ஆயி னானே.

**உரைநடை :—** 'முதலந்தமாயினானே' என்பதை முதலிற் கொள்க.

**உரை :—** தோற்றத்திற்கும் முடிவுக்குங் காரணமானவனே! வினைப்பாசத்திலே அகப்பட்டுக் கிடந்த என்னுள் புகுந்து வலிய எதிர்ப்பட்டு வந்து நின்று, நீ, வா, நான் வினையை யொழிக்கவல்லேன், நான் இத்தன்மையன் என்று உன்னியல்பை எனக்கு அறிவுறுத்தியருளி என்னை அடிமையாக்கி என் தலைவனான உன் பால், இரும்பினாற் செய்த பதுமை போன்ற யான், நின் புகழினைப் பாட மாட்டேன், நிலைபெற்று ஆனந்தக் கூத்தாட மாட்டேன், ஐயோ, கதறமாட்டேன், பதறி வற்றமாட்டேன், உயிர்தளரமாட்டேன், முதல்வனே, நான் இவ்வாறுய முறை நியாயமாமோ? எனக்கு என்ன கதி வருமோ அறிகிலேன்.

**குறிப்பு :—**புகுந்து என்பது உள்ளத்திற் புகுந்து, உலகில் வடிவொடு புகுந்து, என இருபொருள்படும். போது=வா, வினைவழி நின்று வெளியேபோ, அதாவது, என்னிடைவா, என்றுவிரிபொருள்கொள்க. ஆசிரியனது பிரிவாற்றாமையால், 'அலறிடேன், உலறிடேன்; ஆவி சோரேன்' என்றார். தனது கடப்பாட்டுக் குறையால், உய்தி கூடாது போமோ என்ற ஐயப்பாட்டினால், 'முடிவறியேன்' என்றார். இறைவன் கருணைச் சிறப்பை அறிவுறுத்தியவாறு. ௨௨

ஆயநான் மறையவனு(ம்) நீயே ஆதல்
அறிந்துயான் யாவரினுங் கடையன் ஆய
நாயினேன் ஆதலையும் நோக்கிக்கண்டு
நாதனே நான்உனக்கோர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தாம் இல்லையே அன்றி மற்றோர்
பேயனேன் இதுதான்நின் பெருமை அன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசு கேனே.

**உரைநடை :—**நாதனே என்பதை முதலிற் கொள்க. நான்மறை ஆய அவனும் நீயே எனமாறுக.

**உரை :—**தலைவனே! நான்குவேதப் பொருளாயவனும் நீயே. அங்ஙனம் நீ யிருத்தலையறிந்து, அடியேன் எல்லாரினுங் கீழ்ப்பட்ட



விடத்துக் கதறுவதுமில்லை. நீ இவ்வாறு பிணம்போற் பயனற்றுக் கிடப்பின், உய்திகூடச் செய்யத்தக்கதொன்றும் யான் அறியமாட்டேன்.

**குறிப்பு:—**நெஞ்சு, அறிவினைக் குறித்து நின்றது. அறிவின் துணைகொண்டே நற்செயல்கள் நிகழற் பாற்று. அவற்றிற்கு அது தூண்டித் துணை செய்யாவிடத்துப் பயனில்லை யென்றவாறு. அறிவு, இறைவனையே நாடி நிற்றலை வற்புறுத்தினார். உலகியற் பற்றற்றவிடத்தே, அறிவு இறைவனைச் சென்று பற்றாது, பிணம்போற் கிடத்தல் தவறென்பது கருத்து. ௩௧

அறிவி லாத வெனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை
யருளிமேல், நெறியெ லாம்புலமாக்கிய எந்தையைப் பந்தனை
யறுப்பானைப், பிறிவி லாதஇன் னருள்கள்பெற் றிருந்தும்
மா றாடுதி பிணநெஞ்சே, கிறியெ லாம்மிகக் கீழ்ப்படுத் தாய்
கெடுத் தாயென்னைக் கெடுமாறே.

**உரை:—**(இறைவனை அறியும்) ஞானம் இல்லாத என்னை வலிய வந்தாட்கொண்டு தன்னை யறியும் ஞானத்தைக் கொடுத்தருளி அதனாற் பெறும்மேலாகிய வீட்டு வழி முழுவதும் அறிவித்த எமது அப்பனைப், பிறவித் தளையைத் தொலைப்பவனைப் பிரியாதிருத்தற் கேதுவான இனிய அருட் செயல்கள் (எம்பொருட்டுச் செய்யப்) பெற்றிருந்தும், அவனைப் பிரியாமைக்கு மாறாக இயங்குகின்றாயே, சவம்போற் பயனற்ற மனமே (உன் மாறாட்டத்தாலே) பொய்களெல்லாம் மிகுதிப்பட, என்னைத் தாழ்த்தினாய், யான் கெட்டுப்போம் வழியாகக் கெடுதி செய்தனை.

**குறிப்பு:—**மெய்ந்நெறி நில்லாது, பொய் வழிபுகின், பாசத் தொடர்பு மீளும். அதனால் உய்தி கூடாமையாகிய கேடும் இழிவும் உளவாமென்பது குறித்தவாறு. கிறி=பொய். மாறாடுதி=தடுமாறுகிறாய். கெடுத்தாய்=காரியக்கேடு விளைத்தாய். ௩௨

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையைஎம் மதியிலி
மடநெஞ்சே, தேறு கின்றிலம் இனியுனைச் சிக்கெனச் சிவனவன்
திரள்தோள்மேல், நீறு நின்றது கண்டனை யாயினு(ம்)

நெக்கிலை இக்காயம், கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது
கேட்கவும் கில்லேனே.

**உரை நடை:**—'எம்மதியிலி மடநெஞ்சே' என்பதை முதலிற் கொள்க.

**உரை:**—எம் அறிவில்லாத மூடமனமே, என்னைப் பகைத்து நின்று யான் கெடும்படியாகக் கிடந்தாலொத்தாய். இனி மேல் திட்டமாக உன்னை நம்பமாட்டேம். (உருவெடுத்து வந்த) தூயமுதல்வனது திரட்சிமிக்க தோள்களின் மேலே (உலகநிலையாமையுந்திருவருளொளியும் விளக்கும்) திருநீற்றுக்குறி நிலையாக இருந்ததை நீ பார்த்தபோதும் உணர்ந்து கனிவடைந்து உருகவில்லை. (அவனைப் பிரிந்தபோது,) இவ்வுடம்பை வகிர்ந்தாயில்லை. கெட்டொழிவதே உன் தன்மை, இதனை நான் கேட்கவும் பொறுக்கமாட்டேன்.

**குறிப்பு:**—யான் கூறும் அறிவுரையை ஏற்கமாட்டாய், ஆதலால் எம்மதியிலி, இயற்கையன்பும், அறிவுமில்லாதாய், ஆதலால், 'மடநெஞ்சே' என்றாரென்க. கெட,=கெடுக்க. கிடந்தாலனையை, கிடந்தனையை எனத் தொக்கு நின்றது. தேறுகின்றிலம்,=தெளிகின்றிலம்=நம்புகின்றிலம் சிக்கென=உறுதியாக, திட்டமாக. கீறுதல்=கிழித்தல். வகிர்தல். பரிசு=தன்மை. கில், ஆற்றலுணர்த்துஞ் சொல். ௫௫

சிற்ற வாமன மேகெடு வாய்உடை யான்அடி நாயேனை
விற்றெ லாமிக ஆள்வதற் குரியவன் விரைமலர்த் திருப்பாத
முற்றி லாஇளந் தளிர்பிரிந் திருந்துநீ உண்டன வெல்லாமுன்
அற்றவா றும்நின் னறிவும்நின் பெருமையும் அளவறுக்கில்லேனே.

**உரை நடை:**—உடையான் விரைமலர்த்திருப்பாத முற்றிலா, இளந்தளிர் பிரிந்திருந்தும் அடிநாயேனை விற்றெலாமிக ஆள்வதற்குரியவன், சிற்றவாமனமே, கெடுவாய் நீ உண்டன......கில்லேனே.

**உரை:**—என்னையுடையானது மணம் பொருந்திய திருவடிக் கமலங்களாகிய முதிராத இளந்தளிர்களை அடிமையாகிய நாய்போன்ற யான் பிரிந்திருந்தாலும், (என் உடல், பொருள், ஆவி மூன்றுங்கொண்டமையால்) என்னை முழுவதும் விலைப்படுத்தியாவது சிறப்பாக ஆட்கொள்ளும் உரிமையுடையவன். ஆயினும், (உலக பாசங்களிற் செல்



புகுந்து எனவுமிருவகையாகப் பொருள்படும். மாளா=மாளாது, வான்=சிதாகாசம், தில்லைக்குத் தம்மை வரப் பணித்தமையால், சிதம்பரமாகிய சிதாகாசத்தைக் குறித்தன ரென்பாருமுளர். ௧௯

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்(டு)
ஆழ்கின்றாய், ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு (உ)னக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே.

**உரை:**—(பேரின்ப வாழ்க்கையைப் பெற்று) வாழக்கருதாத மனமே, நீ வீணாக உலகிலே நிலைத்திருக்கின்றாய். இதனால், கொடிய வினையிலகப்பட்டுத் (துயரத்தில்) அழுந்துகின்றாய். அங்ஙனம் அழுந்தாமற் காக்கின்ற கடவுளை வழிபடாமல், உனக்குக் கெடுதியையே உண்டாக்கிக்கொள்ள எண்ணுகின்றாய். பல முறையும் உனக்கு அறிவுரை இயம்புகின்றேன். நீ அதனைக் கேளாது, துன்பக் கடலிலெழுந்த பெருவெள்ளத்தே வீழ்ந்தொழிகின்றாய். என் செய்வது?

**குறிப்பு:**—தமது அறிவு இறைவன் பாலீர்ப்ப, மனமானது உலகை அவாவி நிற்பதாகக் கருதி அதனைத் தடுத்து அறிவுரை பகர்தல் இச்செய்யுளின் நோக்கம். ௨௦

## ௩. சுட்டறுத்தல்

[(இப்பதிகத்திலும், இறுதிச்செய்யுள் அகண்ட வழிபாட்டைக் குறிப்பதுபற்றி, இத்தலைப்பு ஏற்பட்டது போலும்.) சுட்டியறியுமறிவை ஒழித்தலென்பது பொருள்.]

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ் மேலாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்(கு)
உள்ளந்தாள் நின்று(உ)ச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல் லாம்கண் ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே.

படேன், புகழ்ந்து பாடித்துதியேன், உள்ளம் விரும்பியுருகமாட்டேன். நான் இவ்வாறு (முக்காரணங்களாலும்) வழிபடாதிருத்தலைப் பொறுக்க மாட்டேன். நான் உய்தற்குத் தகுதியாகும் வகையாது? நான் இறப் பேனிறப்பேன். (இறந்து படவே துணிந்தேன்) என்றவாறு.

**குறிப்பு** :—மிகப் பெரியனாகிய கடவுள் மிகச்சிறியனாகிய என்னை ஆட்கொண்டும், அவனை வழிபடுகின்றேனில்லை. வழிபடாது உயிர் வாழவு முடியவில்லை. இறப்பதே நலமென்பது கருத்தாக அடிகள் கொண்டார். அடிகளின் தீவிர பக்குவத்தையே இத்திருப்பாடலுணர்த் தும். மலர்தூவல், அலறுதல், உருகுதல், முறையே உடம்பு, மொழி, மனம் என்பவற்றின் செயலாதல் காண்க.

கஅ

வேனில்வேள்மலர்க்கணைக்கும்வெண்ணகைச்செவ்வாய்க்கரி
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே [ய
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வான்உளான் காணாய்நீ மாளா வாழ்கின்றாயே.

**உரை** :—இளவேனிலாகிய வசந்த காலத்திலே மன்மதன் விடு கின்ற பூவகைகளாகிய அம்பிற்கும், வெள்ளிய ஒளியுடைய பல்லினை யும், கருநிறமுடைய குவளைபோன்ற கண்களையுமுடைய மகளிர்க்கும் ஈடுபட்டுத் துடித்து நெகிழ்கின்ற பயனற்ற மனமே, நமது உடம்பெல் லாம் (கனிந்து அமுதூறி) உருகும்படியாக, எழுந்தருளி வந்து உள் ளத்தே நிலை பெற்று ஆட்கொண்டருளிய பெருமான், இப்போது சென்று ஞான ஆகாயத்தின் கண் இருக்கின்றான். அவனை நீ காண முயலமாட்டாய். நீ இறந்தொழி யாது, இன்னும் ஏன் நிலைத்திருக் கின்றாய்?

**குறிப்பு** :—மூன்றாம் அடியில், 'உருகப்புகுந்து நின்று' எனக் கொண்டு கூட்டுக. வாசனாமலத்தால், உலகப்பற்றில் ஈடுபடக் கூடா தென நெஞ்சிற் கறிவுறுத்துவார், இங்ஙனம் புகன்றனர் போலும்— இளவேனிற்காலம், காமனுக்குகந்த பெரும்பொழுது, காம எண்ணத் தையே, மதன்அம்பிற் கீடுபடுவதாகச் செப்பினர். பானல்=நீலோற் பலம்=குவளை, கரியபானல்=கருங்குவளை. புகுந்து என்பது உட லுள்ளும் உள்ளத்துள்ளும் உயிருள்ளும் புகுந்து எனவும், கிலவுலகிற்





குற்றம். பிறபற்றொழித்தும், தன்னறிவினைக் கருதினமையால், நெஞ்சே, 'உனை நினைந்துளம்' என்றார். ஈற்றேகாரம் அசை. ருரு

புகுவ தாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப்
போதற்(கு), உகுவ தாவதும் எந்தைஎம் பிரான்என்னை
யாண்டவன் கழற்கன்பு, நெகுவ தாவதும் நித்தலும் அமு
தொடு தேனொடு பால்கட்டி, மிகுவ தாவதும் இன்றெனின்
மற்றிதற் கென்செய்கேன் வினையேனே.

**உரை** :—சென்று அடைதற்குரியதும், (அடைந்தார்) மீளுத லில்லாததும் பொன்னகரமாகிய (வீடாகும்). அதனுட் செல்லுவதற்குப் பற்றுக்கழல்வதும், எமது அப்பனுந் தலைவனுமா யென்னை யாட் கொண்டவனுடைய திருவடிக்கு அன்பினால் நெஞ்ச முருகுதலும், நாடோறும், அமுதம், தேன், பால், கற்கண்டு இவற்றினுமிகுந்ததாய பேரின்ப உணர்ச்சி சிறப்பதும் இல்லையாயின், தீவினையுடையேன் இவ்விடையூற்றை நீக்க யாது செயவல்லேன்.

**குறிப்பு** :—பொன்னகர், மாறுபாடில்லாத வீட்டிற்கு உருவகம். உகுதல்=கழலுதல், நெகுதல்=உருகுதல். கட்டியினுமிகுவது= பேரின்பம், ஆவதும்=உணர்ச்சி சிறப்பதும். நாள்தோறும் என்றது நாளுக்கு நாள் பக்குவ மிகவேண்டுமென்று குறித்தவாறும். ருசு

வினையென் போல்உடை யார்பிறர் யார்உடை யான்
அடி நாயேனைத், தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்
பன்றுமற் றதனாலே, முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்
து(ம்)நான் முட்டிலேன் தலைகீறேன், இனையன் பாவனை
யிரும்புகல் மனம்செவி இன்னதென் றறியேனே.

**உரை** :—என்னைப்போலத் தீவினைப் பயனுகர்ச்சியுடையார் வேறு யாவர்? எனது முதல்வன், அடிமையாகிய நாய்போன்ற என் னைத் தினையளவுகூடப் பிரிதல், அவனது திருவுள்ளக் குறிப்பல்ல. ஆதலால் (பிரிந்திருத்தல் என் தவறே), முன்னோனுடைய நற்றிருத் தாள்களைப் பிரிந்திருந்தும், நான் தலையை மோதமாட்டேன். பிளக்கவு மாட்டேன். இத்தகையேனது எண்ணம் இரும்பாலானது, மனம் கல்லாலானது, செவி இன்னதனாலாயிற்றென்றறிய மாட்டேன்.

வதில்) ஆற்றல் கெடாத நெஞ்சமே, நாசமாய்ப்போவாய்; நீமுன் நுகர்ந்தவை யெல்லாம் கெட்டொழிந்த விதத்தையும் உன் அற்ப அறிவையும் உன்போலிப் பெருமையையும் அளந்தறியு மாற்றலில்லாதேன் யான்.

குறிப்பு :—இறைவன், தன் பெருங்கருணையால், என்னை எவ்வாருயினும் ஆட் கொள்வன். ஆனல், நீ, அருள்பெற்ற போதே, உலகப் பற்றொழிந்தனை யென வெண்ணுதற் கிடமில்லாமையின், உன்பற்று அற்றதா, இல்லையா வென்பதையும், உன்செருக்குச் செயலையும் அளந்தறியக் கூடவில்லை. ஏனெனில், நீ இன்னும், உலகப்பற்றிற் செல்லும் ஆற்றல் கெடாதிருக்கின்றாய் என்றவாறும். இல் = ஆற்றல். தவா = கெடா. 'கெடுவாய்' என்பது, அட பாவி, என்பது போல வியப்புக் குறிப்பு. பற்றியதை விடாது பற்றுமன வியல்பு குறித்தவாறும். ௫௪

அளவ றுப்பதற் கரியவன் இமையவர்க்கு(அ)டியவர்க்
கெளியான்நம், களவு(அ)றுத்துநின் றாண்டமை கருத்தி
னுட் கசிந்துணர்ந் திருந்தேயும், உளக றுத்துனை நினைந்துளம்
பெருங்களன் செய்தது மிலைநெஞ்சே, பளகு(அ)றுத்துடை
யான்கழல் பணிந்திலை பரகதி புகுவானே.

உரை நடை :—நாலாமடியின் முதலில், 'பரகதி புகுவானே' என்பதைக் கொள்க.

உரை :—விண்ணோர்க்கு அளந்து முடிவு செய்தற்கரிய பெருமையையுடையவன், அடியவர்க்கு எளிதின் அருள்பவன், நம்முடைய வஞ்சப்பிறவியை ஒழித்து உள்ளத்தே நிலை பெற்று ஆட்கொண்ட தன்மையை எண்ணத்திலே உருகி யுணர்ந்திருந்தபோதும், உள்ளவற்றை யெல்லாம் வெறுத்தும், மனமே, உன்னை நினைந்திருக்கின்றேம். ஆனல் நீயோ, என்னொடு பெருநட்புச் செய்தது மில்லை. மேலான வீட்டு நெறியடைதற் பொருட்டு, குற்ற மறுத்த முதல்வனுடைய திருவடிகளை வணங்கினது மில்லை.

குறிப்பு :—களவு = வஞ்சம் 'பிறவிக்கு ஆகு பெயர்' உள = உள்ள பற்றுக்கள். கறுத்து = கோபித்து, வெறுத்து ; களன் = நட்பு. பளகு =



ளாயியல் புடையேன் என்பதையும் ஆராய்ந்துபார்த்து உனக்கு ஒரு வகையான அன்பன் என்று சொல்லிக்கொள்ளுவேன் ஆயினன். அக்காரணம்பற்றி நீஎன்னை ஆட்கொண் டருளினுய்போலும், (பேயாய்ப் பிறவாவிடினும், மனித வடிவங்கொண்ட) வேறொரு பேயென்று சொல்லத் தக்கவனுகிய என்னையன்றி உனக்கு ஆட்கொள்ளத் தக்க அடியார்கள் தாம்வேறில்லையோ ? (தகுதியில்லாஎன்னை ஆட்கொண்ட) இச்செய்கைதானே உனது பேராற்றலை யுணர்த்தும் அல்லவா ? எம்பெருமானே! நான் (உன்கருணைத்திறத்தை) யாதுசொல்லிப்பாராட்ட வல்லேன் ?

குறிப்பு :— 'ஆயநான் மறையவனும் நீயேயாத லறிந்து' = என்னை ஆட்கொள்ள உருவெடுத்து வரலான நான்மறை வல்லான் பரம்பொருளாகிய நீயே யென்பதறிந்து, என்று கோடலு முண்டு. ஓர் பேயனேயன்றி மற்று அடியார்தாம் இல்லையே யென்று கொள்க. பேய் அன்னேன் பேய் போன்றேன் என்று, பேயனேன், என்பதைப் பிரித்துப் பொருள் கோடலு முண்டு. சொல்லிப் பேசுதல் = பாராட்டுதல். ௨௯

பேசில்தாம் ஈசனே எந்தாய் எந்தை
பெருமானே என்(று)என்றே பேசிப் பேசிப்
பூசில்தாம் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்று
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே, அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ
என்னைநீ ஆட்கொண்ட வண்ணந் தானே.

உரைநடை :—மாசற்ற மணிக்குன்றே, 'எந்தாய்' என்பதை முதலிற்கொள்க.

உரை :—குற்றமற்ற மாணிக்க மலையே, எமது அப்பனே, தாம் பேசுவதானல், ஆண்டவனே, அப்பனே, எமது அப்பனுக்குந் தலைவனே யென்றே எப்போதும் நின்னைத் துதித்துப் பேசுவார்களாய், ஏதாவது பூசுவதானல், தாம் திருநீற்றினையே நிரம்ப (உடலெங்கும்)

பூசி எம்பெருமானே காத்தருள்க என்று எதற்கும் மொழிந்து பின்னிடாதபோன்பால், பிறவியையும் சாவையுங் கடக்குந் தகுதி யடைந்தாரை ஆட்கொண்டவனே, உலக ஆசைவெள்ளத்தி லகப்பட்டு (உன்னடியார்போல் நடிக்கும்) வஞ்சனேனாகிய என்னை, ஐயோ, நீ ஆட்கொண்ட வகைதான் என்னே ?

குறிப்பு:—மெய்யடியார், பேசுவதானால், ஈசன் புகழே பேசுவர், பூசுவதானால், திருநீறேபூசுவர்என்பது குறிப்பிக்கப்பட்டது. பின்றா = பின்னிடாத. ‘கடந்தார் = கடக்குந் தகுதியடைந்தார். இறைவன் ஆட்கொண்ட பின்னரே, மெய்யாகப் பிறப்பிறப்பைக் கடந்தவராவர். உறுதிபற்றிக் கடப்பாரைக் கடந்தாரென்றாரெனக. வாசனாமலந் தோன்றுதல்பற்றிப் போலும், தம்மை அடிகள் ‘ அவாவெள்ளக்கள்வ’ னென்றார்.

௨௪

வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்(று)
அநேகன் ஏகன் அணுஅணுவி லிறந்தாய் என்(று)அங்(கு)
எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமா(று) அறியாத எந்தா யுன்றன்
வண்ணந்தான் அதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்கள் அவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே.

உரை நடை :—‘ இமையோர் கூட்டம்’ என்பதை முதலிற் கொள்க.

உரை:—வானவர் தொகுதி, உனது நிறந்தான் சிவப்பன்று வெள்ளையன்று, நீ பலவாயிருப்பவன், ஒருவன், அணுவாயிருப்பவன், அணுவினையுங் கடந்த அதிநுட்ப முடையோன், என்று பேசி அவ்வாறே தமது நினைவுதானுந் தடுமாறப்பெற்று, உன்னை யடையுமாறு அறியாது நிற்றற்கேதுவாய எந்தையே, உனது மெய்யியல்பாகிய நுட்பத்தைத் தானுமறிவுறுத்தி, நீ ஆட்கொள்ள வந்த திருமேனியுங் காட்டி, பூப்போன்ற திருவடிகளானவற்றையுங் காட்டி, கதியின்றி நின்ற என்னை உறுதியாகவே பிறவாதிருக்கும்படி தடுத்தாட்கொண்



டருளினை, எந்தலைவனே, உன் கருணையை யாது கூறி மனத்தால் நினைய வல்லேன் ?

குறிப்பு:—விண்ணோர் இறைவனது வெளிப்படையான பல்வகைக் காட்சிகளை நினைந்து மெய்யியல்பறியாது மயங்கினமை கூறியவாறு. வண்ணந்தான் ‘அது’ என்பது மெய்யியல்பைச் சுட்டிநின்றது. ‘மலர்க்கழல்கள் அவை’ என்பதில், ‘அவை’ என்பது திருவடிகளாகிய அருட்சத்திகளைக் குறிக்கும். காத்து = தடுத்து.

௨௫

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.

உரை:—நாய்போன்ற எனது எண்ணத்தை உன்னையே நினைக்கும்படி செய்து, எனது இருகண்களையும், உன் திருவடி மலரிற் சாத்து மலராக ஆக்கி, அதாவது, உன் திருவடியிணையே பார்த்து இன்புறும்படி செய்து, எனது வணக்கமும், அத்திருவடிக் கமலங்கட்கே உரியதாகச் செய்து, எனது சொல்லினை உன் சிறந்த புகழ் பேசுதற்கே உரியதாகச் செய்து, என்னுடைய ஐம்பொறியறிவும் உன்னையே துய்க்கும்படி எழுந்தருளி வந்து என்னை ஆளாகக்கொண்டு, எனதுள்ளத்தின் கண்ணே புகுந்த அருஞ்செயலையுடைய அன்புமயமாகிய ஞானப்பெருங்கடலே, சத்தாகியமலையே, சிவந்ததாமரைக்காடுபோன்ற திருமேனியையுடைய ஒப்பற்ற ஒளியுருவனே, கேடும் ஆக்கமும், அல்லது இருவினையுங் கெட்ட தனிமையனேனாகிய எனக்கு நின்னை நீ கொடுத்தருளினை, (உன் பெருமையிருந்தவாறென்னே) !

குறிப்பு:—மணி = அழகிய, சிறந்த; வார்த்தை = புகழ்; கண் மலர், திருவடி மலரிலே பொருந்துமியையபுடையது, மலர் மலரோடு இனம் பற்றிச் சேர்தலால், நீயே சிந்தனை மயமாகவும், திருவடிமலர், கண் மல

ராகவும், புகழ்ச்சொல்லே வாக்காகவும், அமைத்தனை யென்பதுமொரு பொருள். சிந்தனை, வந்தனை, வார்த்தை—முக்கரண வழிபாடு. இனி ஐம்புலன்களுக்கும் இறைவன் மாட்டே உரியன கிடைக்கப்பெற்றன என்பது கருத்து. அவையாவன:—திருமேனி காண்டல், திருவடி மலர்த்தேன் பருகல், புகழ் கேட்டல், தெய்வ வாசனை முகால், திருவடி சென்னிமிசை தீண்டப் பெறுதல். இரண்டிலி = இருவினையுமில்லாதவன், இகபரம் பயனற்றவன். மூன்றும் அடியில் வந்தனை = வந்து, விச்சை = வித்தை, வியத்தகுசெயல். மால் = அன்பு, இறைவன் செம்மேனியனாதலின் செந்தாமரைக்காடனையமேனி. எல்லா ஒளிகட்கும் தோற்றமாய்ச் சிறத்தலின் 'தனிச்சுடர்' என்றார். 'இரண்டிலித் தனியனேற்கே' என்பதை 'உன்னை' என்பதன்முன் வைக்க. ௨௬

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்(து) எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்(று)ஒன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்(டு)
இனியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

**உரைநடை :**—'மூர்க்கனேற்கே' என்பதை 'கிடக்கின்றேனை' என்பதோடியைக்க.

**உரை :**— (கேவலாவத்தையிலே) தனிமையாய்க் கிடந்தயான், பிறவியாகிய பெருங்கடலிலே விழுந்து, (இருவினையாகிய) துன்பப் பேரலைகளால் தாக்கப்பட்டு ஆதரவு யாதொன்றுமில்லாமல், சுவையாற் பழத்தை யொக்கும் பவளவாய் மாதரென்று சொல்லப்படும் புயற் காற்றால் (அலைக்கப்பட்டு) மனக் குழப்பமுற்று ஆசையென்கிற பெரிய சுறாமீன் வாயிலே அகப்பட்டு, இனி உய்வதற்கு வழியாதோ என்று இடைவிடாது எண்ணிக் கவலைப்பட்டுத் திருவைந் தெழுத்தாகிய தெப்பத்தைப் பிடித்துக்கொண்டு (அதனை மேற்செலுத்திக் கரைசேரவியலாது) கிடந்த, (வேறு நற்குணமில்லாத) மூர்க்குணமுடையேனுக்கு, முதல்வனே, தொடக்கமு மிறுதியுமில்லாத வளம் பொருந்திய முத்திக்கரையைக் காண்பித்து ஆட்கொண்டருளினாய். (உன்கருணையிருந்தவாறென்னே !)



**குறிப்பு :**—'தனியனேன்' என்பது உடம்படாத தனிநிலையைக் குறிக்கும். பிறவிக் கடலிற் பொருந்திய நிலை - சகல நிலையாகும். எவ்வம் = துன்பம். எற்று = மோத்து, தாக்கு. பற்று = ஆதரவு. 'கனி' கொவ்வைக் கனியைக் குறிக்குமென்ப. துவர் - என்று பவளமென்னும் பொருளில், சிவப்பைக் குறித்தலால், 'கனி' சுவைக்கு உவமையாக எடுத்துக்கொள்ளப்பட்டது. புணை = தெப்பம், மிதவைக்கட்டையென்றுங் கொள்ளலாம். மூர்க்கன் = கோபமுடையவன், கீழ்ப்பட்டவன், பிடிவாதமுடையோன். அஞ்செழுத்தின் சிறப்பையும், அதன்கண் தமக்குள்ள உறுதியையும் அடிகள் குறிப்பித்தனர். வீட்டிற்கு முதலீறின்மை தெளிவு. மல்லல் = வளம். ௨௭

கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.

**உரைநடை :**—'கேட்டாரும்' என்பதை 'யாருங்கேட்டு' என மாறுக.

**உரை :**—யாவராலும் கேள்வியால் அறியப்படாதவன். யாதொரு அழிவுமில்லாதவன். உறவினரில்லாதவன். கருவிகளினுதவியின்றியே, கேட்பனவற்றை யெல்லாங் கேட்டவன். உலகத்தார் பார்த்திருப்பவும், உலகின் கண்ணே (புகுந்து) நாயேனுக்கு இருக்கையளித்துச் சிறியனாகிய எனக்குக்கூடக் காட்டக்கூடாதனவற்றை யெல்லாங் காண்பித்து, மேலும் கேட்கக் கூடாதனவற்றை யெல்லாம் அறிவுறுத்தி என்னை மீண்டும் பிறவாதபடி தடுத்து ஆட்கொண்டருளினன் எம்பெருமான், அவன் இயற்றிவிட்ட மாயவித்தைதான் இது.

குறிப்பு :—இந்திரன், அயன், அரி, அரன் இவர்க்கு அப்பாற்பட்டவன். அவர்க்குமேல் அப்பெயருடைய காரணேசுரர் உளரெனின், அவர்க்கு மிறைவன் தந்தையாதலின், இவர்கட்கு அவன் பாட்டனுயினன். யார்க்கும் முற்பட்ட தகப்பன் என்று மூதாதையென்பதற்குப் பொருள் கொள்வாருமுளர். சிவஞ்சத்தியாய் யாவற்றையு மேற்கொண்டு நிற்பானெனன்பார், 'மாதொரு பாகத்தெந்தை' யென்றுர். அப்பர்சுவாமிகள் நாமார்க்குங் குடியல்லோமென்பதை இது வினைவுறுத்துகின்றது. 'அஞ்சுவதி யாதொன்றுமில்லை.' என்றதுங் காண்க. இறுமாந்திருப்போமென்பதுபோல, 'குடைந்தாடி யாடுவோ' மென்றுர். பேரின்ப நுகர்ச்சி எப்போதுந் தொடர்தலின், அதற்கு எல்லையின்மை குறித்தவாறு. கo

---

## ரு. ஆத்துமசுத்தி

[நெஞ்சறிவுறுத்தலினுலே உயிரைத் தூயதாக்குதல்.]

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

உரை நடை :—'துணையிலி பிணநெஞ்சே' என்பதை முதலிற் கொள்க. 'ஆடுகின்றிலை' என்பதை 'அன்பிலை' என்பதற்குப் பின் கொள்க.

உரை:—யாதொரு துணையுமில்லாத சவம்போன்ற மனமே; நினது கூத்தாட்டினை இயற்றுவிக்கும் முதல்வனது திருவடிக்கண் அன்பில்லாதிருக்கிருய். அவன் பால் ஆனந்தக் கூத்தியற்ற மாட்டாய். எலும்புருகப்பாடுவதுஞ் செய்கின்றுயில்லை. அஞ்சி நடுங்குவதுமில்லை. தாழ்ந்து வணங்குவதுமில்லை. அவனது திருவடிக் கமலங்களைச் சென்னிமேல் அணிந்து கொள்ளுகின்றுயில்லை. திருவடிகட்கு மலர் மாலை சாத்துவதுஞ் செய்யமாட்டாய். அவன் திருவடியிணைகளைத் தேடி நாடுவதுமில்லை. தெருவுதோறும் அலைந்து தேடிக்காணுத

குறிப்பு :—இறைவனே குருவாக வந்து நேரில் அறிவு நல்கப்பெற்று அறியுந் தாத்தனேயன்றிப் பிறர்பாற்கேட்டு அறியப்படாதானென்பார், 'கேட்டாரு மறியாதான்' என்றார். உபதேசம் பெற்றாராலுங்கூட முற்றிலு மறியப்படாதான் என்றுங் கூறுப. தந்தைதாய் முதலிய உறவினரில்லாதான் தம் வயமும் பற்றின்மையுமுடையனாதலினென்க. கேளாதே என்பதற்குப் பிறர் வாயிலாகக் கேட்டறியாதே என்றும் பொருள் கொள்வர். உயிர்கள் கூறும் எல்லாவற்றையுந் தானே கேட்டருள்புரிபவன் - என்பதுங் கொள்க. யாரும் அறியத் தெளிவாகவே, பக்குவம் வந்த காலை இறைவன் திருப்பெருந்துறையில் ஆண்டனன். அந்நுட்பத்தை உலகில் நாட்டினர்கள் விழித்திருந்தும் அறிந்திலரென்பது. தவிசு = ஆசனம், இருக்கை. இறையாசான், தன்பக்கம் அடிகளை இருக்கும்படி செய்து மெய்யறிவு நல்கினன். இருக்குமிடம் கொடுத்ததையே 'தவிசிட்டு' என்றார். ஞானிகள் இறையறிவாற் காண்பன, கேட்பன, பிறரா லறியப்படாமையின், அவ்வாறு கூறினர். வித்தை = வியத்தகு அற்புதச் செயல். உஅ

விச்சைதான் இது ஒப்பது (உ)ண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடிய னாக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டான் அமுதம் ஊறி
அகம்நெகவே புகுந்தாண்டான் அன்பு கூர
அச்சன் ஆண் பெண் அலி ஆகாச மாகி
ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும் மேனி யெங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே.

உரை நடை :—'கேட்கின்' என்பதை முதலிற் கொள்க.

உரை :—ஆய்ந்து வினவினால், மாயவித்தைதான் இதைப்போன்றதுண்டோ, தம்பால் மிகுந்த அன்புடைய அடியார்கட்கு என்னை அடியானாக்கி, பிறப்பிறப்புப் பயத்தை நீக்கி யென்னை ஆட்கொண்டருளினன். பேரின்ப அமுதம் ஊற்றெடுத்து நெஞ்சங்கரைந்து அன்பு மிகுதிப்படும் வண்ணம், என் உள்ளத்தே புகுந்து ஆண்டருளினன். அவன் யாரெனில், (எல்லார்க்கும்) அப்பன், ஆண், பெண், அலி என்பவையாய், எல்லாவற்றிற்கும் இடங்கொடுக்கும் வானாகிக் கடத்தற்கரிய சோதிவடிவான தூயமாயையாகி, முடிவாகி, அப்பாற்பட்டு நின்ற, வெட்சியின் சிறந்த பூப்போலச் செம்மேனி படைத்த எங்கள் சிவபரம் பொருள், எமது தலைவன் அவனே விண்ணவர்க்கரசன் என்றவாறு.



குறிப்பு :—அடியர்க்கடியனாதல், அயராவன்பினை வளர்த்தற்குக் கருவியாம். அச்சன் = அப்பன். நுண்ணிய வடிவனென்று பொருள் கொள்வாருமுளர். ஆரழல் = கடத்தற்கரிய நெருப்பு அல்லது ஒளி. ஆகாசமென்பதை மூலப்பகுதி யெனவும், ஆரழல் என்பதை ஒளிமயமான காதகலையுடைய சுத்தமாயை யெனவுங் கூறுப. இறைவன் அப்பாற்பட்டவனாயினும், அடியார்க்குச் செம்மேனியனாய் வெளிப்பட்டருளுதலின், 'செச்சைமேனி' என்றார். செச்சை = வெட்சி. மா = சிறந்த. உகூ

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவன்அடியார் அடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே.

உரை:—விண்ணவர்க்கரசனாகிய இந்திரன் உணராத மகாதேவன் வளவிய உலகங்களைப்படைத்துக் காத்து ஒடுக்குகின்ற ஏனை மூவராகிய அயன், அரி, அரன் என்பார்க்குத் தலைவனாய் நின்ற ஈசன். (எல்லாந் தமது) வடிவாகக் கொண்டவன். எல்லார்க்கும் பாட்டன். உமை வீற்றிருக்குமொரு பகுதியுடைய எமது அப்பன். யாவர்க்கும் அரசன். கடைப்பட்ட என்னையும் தானே வந்து ஆட்கொண்டருளினன். ஆதலால், அடியேங்களாகிய யாங்கள், அவனொழிந்த பிறர் எவர்க்கும் அடிமையாகமாட்டோம். எதற்கும் பயப்படமாட்டோம். அவனுடைய அடியார்க்கடியரா யிருப்பாரோடு பொருந்தியுள்ளோம். அவனது ஆனந்தக் கடலிலே, மேலுமேலும் மூழ்கித் திளைத்துக் கூத்தாடுவோமே.